நாவாந்துறைப் படிப்பகம்

உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 4 புதன்கிழமை (19~07~2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:166

# சஞ்சீவனின் கொலை குறித்து முழு விசாரணைக்குப் பணிப்பு!

## உண்மை நிலையை வெளிப்படுத்த இராணுவ உயர்பீடம் அறிவுறுத்து

கொழும்பு,ஜூலை19

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் கொலையுண்டது தொடர்பாக முழு விசாரணை நடத்தி, உண்மை நிலையை வெளிக்கொணருமாறு இராணுவ உயர்பீடம் கொழும்பிலிருந்து இங்குள்ள அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.**

பாடசாலை மாணவன் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து பூரண விசாரணையை நடத்தி, உண்மையை வெளிக்கொணர நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட அதிகாரிக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாக, கொழும்பில் இராணுவ உயர் அதி

(12ஆம் பக்கம் பா்க்க)



அரசியலில் அரிசிக்கு இருந்த இடம் இப்ப பாணுக்குப் போல...

## தமிழகம் புறப்பட்டோருக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவம்!

### எண்மர் பற்றித் தகவல் இல்லை

மன்னார்,ஜூலை19

தலைமன்னாரிலிருந்து தமிழகம் நோக்கிப் படகில் சென்று கொண்டிருந்த 12 பேர் மீண்டும் பேசாலைக் கடற்கரைக்குச் சமீபமாக கடலில் இறக்கிவிடப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7மணிக்கு இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் 4 பெண்கள் நீந்திக் கரை சேர்ந்தனர்; 3 சிறுவர்கள் மற்றும் 5 ஆண்கள் குறித்துத் தகவல் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (12ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் பாதுகாவலர் சங்கம் அலரி மாளிகைக்கு ஊர்வலம்

### திங்களன்று நடத்த ஏற்பாடு

கொழும்பு,ஜூலை19

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளைப் பார்வையிட வன்னி செல்ல அனுமதி வழங்கும்படி கோரி ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரி மாளிகை நோக்கி எதிர்வரும் திங்கட்கிழமை அமைதி ஊர்வலம் ஒன்றை நடத்த காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கம் திட்டமிட்டுள்ளது.

அன்று காலை மகாவலி அபிவிருத்தி அலுவலகத்தில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகும்.

அலரிமாளிகைக்குச் சென்று மகஜர் கையளிக்கவும் -

அதன் பின்னர் விகாரமாதேவி பூங்காவுக்குச் சென்று அங்கு சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ளவும் ஏற்பாடாகியுள்ளதாக அந்தச் சங்கத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சில பாடசாலைகளில் நேற்றுப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ். நகரப் பகுதியில் சில பாடசாலை மாணவர்கள் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதுடன் ஏனைய பாடசாலை மாணவர்களைப் பகிஷ்கரிப்புக்கு தூண்டும் முயற்சியிலும் ஈடுபட்டனர்.

இதனால் நகரை அண்டிய சில பாடசாலைகள் முற்றாகச் செயலிழந்தன.

இந்த மாணவர்களின் கோரிக்கை என்ன என்பது குறித்துத் திட்டவட்டமான - தெளிவான தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை யாழ். மத்திய கல்லூரியை அண்டிய பிரதேசத்தில் வைத்து பிற பாடசாலைகளைச் சேர்ந்த 10க்கும் அதிகமான மாணவர்கள் நேற்றுக் காலை பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். எனினும் மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரையின் தலையீட்டை அடுத்து அவர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டனர்.

வடமராட்சிப் பகுதியிலும் நேற்றுப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-173-118-117-5)

## ஐ.தே.கவினர் பாணுடன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை19

விலைவாசி உயர்வு, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமை ஆகியவற்றைக் கண்டித்து ஐ.தே.க. நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை கொழும்பில் நடத்தியது.

பாணை தடிகளில் குத்தி ஏந்தியவாறு ஆயிரக்கணக்கானவர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

**5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் உள்ளே!**

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் போராட்டம் கைவிடப்பட்டது

திருகோணமலை,ஜூலை19

வடக்கு - கிழக்கில் எதிர்வரும் 21ஆம் திகதிமுதல் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட வேலை நிறுத்தம் மற்றும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைப் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஆகியவற்றைத் தற்காலிகமாகக் கைவிடுவது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள நிலுவை, இடர்காலக் கொடுப்பனவு ஆகியவற்றை வழங்க உடன் நடவடிக்கை எடுப்பதாக மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்தன நேற்று மாலை தம்மைச் சந்தித்த சங்கத் தூதுக்குழுவிடம் உறுதியளித்ததை அடுத்தே இந்தப் போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சங்கத் தூதுக் குழுவுக்கும் ஆளுநருக்குமிடையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வேறு பல விடயங்களும் ஆராயப்பட்டன என்று கூறப்பட்டது. (இ-3)

## ரயில் தண்டவாளத்தில் குண்டு வெடிப்பு!

திருகோணமலையிலிருந்து நான்கு கிலோமீற்றர் தூரத்தில் பாலையூற்று ரயில் நிலையத்துக்குச் சமீபமாக ரயில் தண்டவாளத்தில் நேற்று மாலை 5.10மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததில் ரயிலின் சிலபெட்டிகள் சேதத்துக்குள்ளாகின.

திருமலையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த ரயில் பாலையூற்று ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சில நிமிடங்களில் இந்தக் குண்டு வெடித்தது.

இதைத் தொடர்ந்து அந்த ரயில் சீனன்குடா ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டு பயணிகள் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

மாலை 7.20 மணியளவில் அது கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. (இ-3-4)

## அரசமைப்புக்கு எதிராக பௌத்த குருமார் போர்க்கொடி

கொழும்பு,ஜூலை19

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் எட்டியுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்படும் புதிய அரசமைப்புக்கு எதிராக தேசிய சங்க சபா உட்பட பத்து பௌத்த அமைப்புக்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளன.

இரு தரப்பினரும் எட்டிய உடன்பாடு பௌத்த மக்களுக்கு எதிரானது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் புதிய அரசமைப்பின் உள்ளடக்கத்தை அரசு உடனடியாக பௌத்த மத மகாநாயக்கர்கள், பௌத்த மக்கள் முன்வைக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

"இரு தரப்புகளுக்கும் இடையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டில் பௌத்த மதத்துக்குப் பாதகம் ஏற்பட்டுள்ளதாக அறிகிறோம். இதற்கு அனுமதிக்க நாம் தயாரில்லை. எனவே அரசு உண்மை நிலையை மக்களுக்கு வெளியிடவேண்டும்" என்று தேசிய சங்க சபா பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

தமது சபாவின் கிராமியக் கிளைகள் மூலம் துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்து கருத்துக் கணிப்பு நடத்தவிருக்கின்றோம். புதிய அரசமைப்புக்கு எதிராகக் குரல் எழுப்புவதுடன் வாக்களிக்குமாறும் அவர்களைக் கோரவிருக்கின்றோம்" என்றும் அவர் மேலும் சொன்னார். (அ-3)

## நுண் அலைத் தொலைபேசிச் சேவை அடுத்தவாரம் முதல் சீரடையலாம்

### ரெலிக்கொம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பொறியியலாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை19

மன்னார் ஊடான யாழ்ப்பாணத்துக்கான நுண் அலைத் தொலைபேசிச் சேவை எதிர்வரும் திங்கட்கிழமை பரீட்சித்துப் பார்க்கப்படவிருக்கிறது. அந்த முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் குடாநாட்டுக்கான தொலைபேசிச் சேவை சீராகுமென்று ரெலிக்கொம் நிறுவன யாழ். பிராந்திய தொலைத் தொடர்புப் பொறியியலாளர் அன்ரன்ராஜா தெரிவித்தார்.

தொலைபேசிச் சேவை தொடர்பாக அவர் விளக்கமளிக்கையில் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1996ஆம் ஆண்டு குடாநாட்டில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் மன்னார் ஊடாக 100 இணைப்புக்களுடன் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயம் 80 வாடிக்கையாளர்கள் மட்டும் இருந்தனர். மட்டுப்படுத்தப்பட்ட முறையில் அவர்களின் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு சேவைகள் வழங்கப்பட்டன.

அதன் பின்னர் 97ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பண்ணையில் கொன்ரெயினர் பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்பட்டது. அதன்மூலம் மோட்டோறோலா மற்றும் கேபிள் மூலமாக 2500பேருக்கு இணைப்புக்கள் வழங்கப்பட்டன.

தற்சமயம் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்துக்கும் மடுகந்தவுக்கும் இடையில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக தொலைத் தொடர்புச் சேவை முற்றாகச் செயலிழந்தது.

இதனால் 96ஆம் ஆண்டு இருந்த நிலைக்கு மீண்டும் பின்தள்ளப்பட்டோம். மன்னார் ஊடாக சீராக்கப்பட்ட கேபிள் மூலமான சேவை மூலம் 1500 பாவனையாளர்களுக்கு இணைப்பு வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் புலிகள் மோட்டார் தாக்குதல்!

கொழும்பு,ஜூலை19

சாவகச்சேரிப் பகுதியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார்த் தாக்குதலில் 3 இராணுவத்தினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

சரசாலையில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் பதுங்குகுழிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - இந்தத் தாக்குதலில இரண்டு புலிகள் உயிரிழந்தனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-4)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளி

## மனமார வாழ்த்துகின்றோம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்
**"கலா பூஷணம்"**
விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட
தலைசிறந்த மூத்த நாதஸ்வரக் கலைஞர்

**திரு. K. R. சுந்தரமூர்த்தி**

அவர்களை வாழ்த்துவதுடன் பல்லாண்டு காலம் சிறப்புடன் பணியாற்ற சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி சங்காபிஷேக சபையினர் வேண்டுகின்றார்கள்.

**சங்காபிஷேக சபையினர்,**
*பறாளாய்,*
*சுழிபுரம்.* (76532)

## வாழ்த்துகின்றோம்

திருநெல்வேலி, விநாயகர் சிற்பாலய ஸ்தபதி

**திரு. சு.இராசரத்தினம்**

அவர்கள் இந்து சமய கலாசார அமைச்சினால் 'கலா பூஷண"விருது பெற்றமையை பாராட்டி எல்லாம்வல்ல எங்கள் பத்திரகாளி அம்பிகையின் அருள்பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபை,
ஸ்ரீ பத்திரகாளியம்பாள் தேவஸ்தானம்,
திருநெல்வேலி.
(76544)

## பல வர்ண அச்சுத் தேவைகளுக்கு

- ☆ நினைவு மலர்களுக்குரிய பல வர்ண பிள்ளையார், முருகன், அம்மன் படங்கள்,
- ☆ நினைவுக்குரியவர்களின் பல வர்ணப் படங்கள்,
- ☆ வெளியீட்டுப் புத்தகங்களுக்குரிய பல வர்ண முன்பக்கப் படங்கள் அச்சிட

*பிள்ளையார் கொம்பியூட்டர் அச்சகம்*

PILLAIYAR OFFSET PRINTERS
(A Graphic Arts Industry)
(76540) 676, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 30 | | 18 |
| - | | - |
| 10 | | 07 |
| - | | - |
| 1953 | | 2000 |



அமரர்
**கந்தசாமி தர்மேசன்**
(உபதலைவர் - மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலனசபை)

எமது பரிபாலனசபையின் பொதுச்சபை உறுப்பினராகவும் உபதலைவராகவும் இச் சபையின் வளர்ச்சியில் சிறப்புற செயலாற்றியவருமான "தர்மேசன் மாஸ்டர்" என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவருமான **அமரர் கந்தசாமி தர்மேசன்** அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது.

இவர் இக்கிராமத்தின் கண்போல விளங்கும் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகரின் அரிய பக்தி கொண்ட அடியார் ஆவார். இவ்வாலயத்தின் மஹா கும்பாபிஷேகம் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேறவேண்டும் என்று அயராது உழைத்த உத்தமன் ஆவார்.

அன்னாரின் மறைவு இக்கிராமத்திற்கு ஒரு பேரிழப்பாகும். அவரை இழந்து சோகத்தில் ஆழ்ந்திருக்கும் மனைவி, மக்களுக்கு அனுதாபங்களைக் கண்ணீர் அஞ்சலியாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மூளாய் வதிரன்புலோ*
*சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலனசபை.*
மூளாய். (76535)

## சிகரெட் வகைகள் சந்தைக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை19

கொழும்பிலிருந்து 'சிலோன் டுபாக்கோ கொம்பனி'யால் அனுப்பப்பட்ட சிகரெட் வகைகள் இன்று முதல் பாவனையாளர்களுக்குக் கட்டுப்பாட்டு விலைகளில் விற்கப்படும் என்று அந்த நிறுவனத்தின் விற்பனை அதிகாரி தெரிவித்தார்.

கப்பலில் இருந்து இறக்கப்பட்ட சிகரெட் வகைகளை நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களான குகன் ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம், முருகன் ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம், சிறிவிக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்- சாவகச்சேரி ஆகிய நிலையங்கள் ஊடாக மட்டுமே சந்தைப்படுத்த நேற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அவர் மேலும் சொன்னார்.

நிறுவன முகவர்கள் ஊடாகச் சிகரெட் விற்பனை நடைபெறவுள்ளதால் இதுவரை நிலவிய தட்டுப்பாடு நீங்கிவிடும் என்றும் விற்பனை அதிகாரி நம்பிக்கை தெரிவித்தார். (அ)

## பெற்றோர், ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு 2000 பிரிவு மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர் கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைபிற்பகல் 1.15மணியளவில் நடைபெறும் என்றும் -

ஜூலை 2000 தொண்டமனாறு வெளிக்கள நிலையப் பொதுப்பரீட்சைப் புள்ளிகளை பெற்றோர் பார்வையிடலாம் என்றும் அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

## கசிப்பு மீட்பு

நெல்லியடி,ஜூலை19

நேற்று அதிகாலை வடமராட்சிப் பகுதியில் இரு இடங்களை முற்றுகையிட்ட பருத்தித்துறை பொலீஸார் பெருமளவு கசிப்பையும் கோடாவையும் மீட்டுள்ளனர்.

வடமராட்சியிலுள்ள தம்பசெட்டிப் பகுதியிலும், பருத்தித்துறை சந்தை மேற்கு ஒழுங்கையிலுள்ள சில வீடுகளிலுமிருந்தே இவற்றை மீட்டுள்ளதாக பருத்தித்துறை பொலீஸ் நிலைய சப்இன்ஸ்பெக்டர் சமரகோன் தெரிவித்தார். (ஐ-109)

*ஸ்ரீகாந் கல்வி நிலையம்*

**இணுவில்**

**A/L 2001**
**அளவையியல்**
**S.S.மனோகரன்**

**துரித மீட்டலும் வினா விடை வகுப்பும்**
**ஆரம்பம்:- 23-07-2000**
சனி மாலை 4 மணி.
(புதிய நேரம்)

**A/L 2002**
ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
(76547)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
பிரபுதேவா, ரோஜா, சரத்குமார், கபாலி மற்றும் பலர் நடிப்பில் இனிய பாடல்கள் நிறைந்த
**இந்து**
புதிய நேரம் 10.30, 2.00
(C/12207)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
*ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, ரம்யாகிருஷ்ணன்*
நடிப்பில
**படையப்பா**
(ரீலீஸ்)
காட்சிகள்:-
11.00, 2.30
(புதிய நேரம்)
(C/12232)

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம்,ஜூலை19

நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 104 தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதேகப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 57 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபாற் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-10)

# ST.PATRICK'S COLLEGE

# INVITATION

*Dear Parents and Old Boys,*
*It is our great pleasure to invite you to be present at the Occasion when*

THE SRI LANKAN PHILATELIC BUREAU
*issues*
A COMMEMORATIVE POSTAGE STAMP
*to Mark*
THE 150th ANNIVERSARY OF THE FOUNDING OF OUR ALMA MATER

**ST. PATRICK'S COLLEGE, JAFFNA.**

*Mr. A.K. Sivagnanasundaram, The Deputy Post Master General, North East Province, will issue the First Postage Stamp and The First Day Cover to*

*The Chief Guest*
*Rt.Rev. Dr.Thomas Savundaranayagam*
*Bishop of Jaffna.*

| | |
|---|---|
| *Venue* | *: THE MATHEWS HALL* |
| *Date* | *: 21st July 2000* |
| *Time* | *: 10.00 a.m.* |

Rector, Staff and Students,
St. Patrick's College,
Jaffna.
(C/12258)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கனகரட்ணம் (கனெக்ஸ்)

(உதவித்திட்டமிடல் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)

பிறவுண் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் செல்வகிரி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை கனகரட்ணம் அவர்கள் நேற்று (18.07.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க.அரியமலர் (மனைவி)
க.அருந்ததி (மகள்)

*4ஆம் கட்டை,*
*ஆனைக்கோட்டை.* (76545)

### விஜயலட்சுமி வயிரவப்பிள்ளை

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற வயிரவப்பிள்ளை - தெய்வநாயகியின் மகள் விஜயலட்சுமி நேற்று (18.07.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் விஜயகுமார்(கொழும்பு), சிவகணேசன் (பாற்பண்ணை, திருநெல்வேலி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2000)புதன்கிழமை பன்னாலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
வ.சிவகணேசன்
(சகோதரன்)
(76549)

### கந்தசாமி தர்மேசன்

தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் தற்போது மூளாயை வதிவிடமாகக் கொண்டிருந்தவருமான கந்தசாமி தர்மேசன்(திட்டமிடல் உதவியாளர், வலிகாமம் வலயம், சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர், காங்கேசன்துறை மாவட்டம்) அவர்கள் நேற்று (18-07-2000) செவ்வாய்க்கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (தலைமை ஆசிரியர்)-தங்கம் (இளைப்பாறிய ஆசிரியை, கொழும்பு) அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலாயுதம் (ஆசிரியர்) - மனோன்மணி அவர்களின் மருமகனும் ஆனந்தராணியின் அன்புக் கணவரும் தரணிதரன், சேந்தரன், வித்தகதரன்(மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.அழகேசன் (U.K), குமரேசன் (கொழும்பு), யுவராணி(திருநெல்வேலி), உமாராணி(கனடா), திலகராணி (கனடா),தணிகேசன்(சுவிஸ்),அருணேசன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசேந்திரம்(திருநெல்வேலி ஸ்ரோர்ஸ்), வசந்தகுமார், சௌந்தரன், இராசரத்தினம்(பகலோன் களஞ்சியம்),குமரகுருநாதன் (கிராம உத்தியோகத்தர், சுழிபுரம்),கருணாகரன் (ஆசிரியர், யா/கனகரத்தினம் ம.வி.) நந்தகுமார் (ப.நோ.கூ.ச. யாழ்ப்பாணம்) மற்றும் இந்திராதேவி, கல்யாணி, குகாநந்தினி, சுதர்சனா, மனோராணி, மதனராணி, சயந்தி (ஆசிரியை, யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), சிவராணி (ஆசிரியை, யா/சன்மார்க்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19-07-2000) புதன்கிழமை காலை 9-30 மணியளவில் மூளாய் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பித்தனை மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.கருணாகரன்
(மைத்துனர்)

*மூளாய்,*
*சுழிபுரம்.* (C/12262)

## பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கு:
# அத்வானி, தக்கரே உட்பட 49 பேர் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு!
### செப். 15இல் குற்றச்சாட்டுப் பதிவு!!





புதுடில்லி, ஜூலை 19

அயோத்தி பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதற்காக எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி மற்றும் சிவசேனைத் தலைவர் பால்தக்கரே உட்பட குற்றஞ்சாட்டப்பட்ட 49 பேரும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தவழக்கு நடைபெறும் போது நீதிமன்றத்தில் சமுகமளிக்காமல் இருக்க அனுமதி கோரி அத்வானி, தக்கரே உட்பட 47 பேர் தாக்கல் செய்திருந்த கோரிக்கை மனு மீதே இந்த உத்தரவு விதிக்கப்பட்டது. அத்துடன் நீதிபதி அவர்களின் கோரிக்கையையும் நிராகரித்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் உட்பட குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் வழக்கு நடக்கும் நாள்களில் நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அயோத்தியில் ராமர் பிறந்த இடத்தில் இருந்த கோயிலை இடித்துவிட்டே பாபர் மசூதி சில நூற்றாட்டுகளின் முன் கட்டப்பட்டதாகக் கூறிவந்த பாரதீய ஜனதாக் கட்சி உட்பட இந்து அமைப்புகள் ஒன்று சேர்ந்து நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது அந்த மசூதியை இடித்துத் தரை மட்டமாக்கினர்.

இந்தச் சம்பவத்திற்கு மூலகாரணமானவர்கள் என்று அத்வானி, தக்கரே, முரளி மனோகர் ஜோஜி உட்பட இந்து தத்துவ அமைப்புகளைச் சேர்ந்த 49 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

(ஒ)

## ஈரான் நடத்திய
# ஏவுகணைச் சோதனை வெற்றி; அமெரிக்கா, இஸ்ரேல் அதிர்ச்சி!

தெஹ்ரான், ஜூலை 19

ஈரான் 'சகாப்' இடைத்தூர ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. இந்தச் சோதனையால் இஸ்ரேலும், அமெரிக்காவும் அதிர்ச்சி அடைந்துள்ளன.

ரஷ்யத்தொழில் நுட்பத்தால் மேம்படுத்தப்பட்ட இந்த 'சகாப்' ஏவுகணை ஆயிரத்து 300 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று இலக்குகளைத் தாக்க வல்லது.

இந்த ஏவுகணையை ஏவித் தாக்கும் தூரத்தில் உள்ள இஸ்ரேலைத் தாக்க முடியும். இதனால் இஸ்ரேல் அதிர்ச்சி அடைந்துள்ளது.

இந்தஏவுகணைச்சோதனை ஒரு மிரட்டல் நடவடிக்கை என்றும் —

இஸ்ரேல் — பலஸ்தீன சமாதான நடவடிக்கைகளை இது சீர்குலைக்கும் என்றும்—

இஸ்ரேல் கூறியுள்ளது.

அணுஆயுதப் பரவல் அச்சத்தை இந்தச் சோதனை ஏற்படுத்தியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இவற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட ஈரானிய 'பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் — நவீன தொழில் நுட்பத் தரத்தைச் சோதிப்பதற்கே இந்தச் சோதனை நடத்தப்பட்டதாகக் கூறினார். அத்துடன் உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா ஏவுகணை எதிர்ப்புச் சோதனை நடத்தியதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

(ஐ-ஒ)

# 'கொலையுண்டவர்' உயிருடன் வந்தார்!

புதுடில்லி, ஜூலை 19

பிஹாரில் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட இரண்டு பேர் கொலையுண்டதாகக் கருதப்பட்டவர் உயிருடன் திரும்பி வந்ததால் விடுதலையானார்கள்.

பொய்க் குற்றச்சாட்டுக்கு ஆளான அந்த இருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு மாநில அரசை தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து மாநிலப் பொலீஸாரின் செயற்பாடு குறித்து கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

(ஐ-ஒ)

## கால்பந்தாட்டப் போட்டியில்
# காற்சட்டையுடன் விளையாடிய இளைஞர்களுக்கு மொட்டை!
## தலிபான்கள் தண்டனை

காபூல், ஜூலை 19

ஆப்கானிஸ்தானில் அரைக் காற்சட்டையுடன் உதைபந்து விளையாடிய பாகிஸ்தானியர்களுக்கு இஸ்லாமியச் சட்டப்படி — பொது இடத்தில் ஆபாசமாக உடையணிந்த குற்றத்திற்காக - மொட்டையடித்துத் தண்டனை வழங்கப்பட்டது.

பாகிஸ்தானிய கிராமம் ஒன்றைச் சேர்ந்த இளைஞர்கள் எல்லைதாண்டி ஆப்கானிஸ்தானிய கிராமம் ஒன்றிற்குச் சென்று உதைபந்தாட்டப்போட்டி ஒன்றில் கலந்து கொண்டனர்.

போட்டியின்போது, ஆப்கானிய இளைஞர்கள் உடலை முழுவதும் மறைக்கும் 'குர்தா' உடையணிந்திருந்தனர். பாகிஸ்தான் இளைஞர்கள் சிறு காற்சட்டை மற்றும் பனியன் அணிந்தே ஆடினார்கள்.

இந்தப் போட்டியை இளம் பெண்கள் உட்பட அப்பகுதி மக்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த ஆப்கான் அதிகாரிகள் பொது இடத்தில் இஸ்லாமியச் சட்டங்களை மீறி ஆபாசமாக உடையணிந்துள்ளதாகக் கூறி பாகிஸ்தான் இளைஞர்களின் தலைகளை மொட்டையடித்து அனுப்பினார்கள்.

தற்போது தலிபான் அரசு உடைகள் தொடர்பான தமது நாட்டின் சட்டம் வெளிநாட்டவரைக் கட்டுப்படுத்துமா? என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

(ஒ)

## இந்தியர் மற்றும் கிளர்ச்சியாளர் உள்ளிட்ட
# பிஜி அமைச்சரவை தெரிவு; புதிய அதிபரும் நியமனம்

சுவா, ஜூலை 19

பிஜியில் இந்தியர் மற்றும் கிளர்ச்சி ஆதரவாளர் ஆகியோரை உள்ளடக்கிய அமைச்சரவை பிரதமர் லெய்சினியக ராசே தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அதிபராகவும் இராணுவத் தலைவராகவும் ஜோசவோ இலய்லோ என்பவரை பழங்குடித் தலைவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

புதிய அமைச்சரவையில் 20 அமைச்சர்களும், 12 துணை அமைச்சர்களும் உள்ளனர். இந்திய வம்சாவளியினரான ஜோர்ஜ் சிவராஜ் என்பவரும் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட்டின் ஆதரவாளர் ஒருவரும் அமைச்சர்களாகப்பட்டுள்ளனர்.

இதேசமயம் முன்னர் முப்படைகளிடமிருந்து கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியிருந்த பல ஆயுதங்கள் இதுவரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை என்றும் அந்த ஆயுதங்களை மீளப்பெற புதிய அரசு நடவடிக்கை எடுக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களை முற்றாக ஒப்படைக்கும் வரை இராணுவம் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தலைநகர் சுவாவில் இந்திய வம்சாவளிக் குடியிருப்பு ஒன்றில் வசித்து வந்த சுமார் 100 குடும்பங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பாதுகாப்பான இடம் தேடி ஓடிவிட்டதாகவும் அவர்களின் வீடுகளும் சொத்துக்களும் சூறையாடப்பட்டு பின் தீவைக்கப்பட்டதாகவும் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

(ஐ-ஒ)

### சீனாவிற்கு புடின் விஜயம்

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

சீனத் தலைவர் ஜியாங் ஜெமின் ரஷ்ய அதிபருக்கு சிறப்பான வரவேற்பு அளித்துள்ளார்.

புடினின் விஜயம் இரு நாட்டு உறவுகளை மேம்படுத்துவதுடன் பொருளாதாரம் உள்ளிட்ட வளர்ச்சிகளுக்கு உதவும் என்று கூறப்படுகிறது.

# செர்பியர் மீதான தாக்குதல்; 17 நாடுகள் மீது வழக்கு!

லண்டன், ஜூலை 19

யூகோஸ்லாவியா மீது கடந்த ஆண்டு முற்பகுதியில் தாக்குதல் நடத்திய நேட்டோ அமைப்பில் உள்ள 17 நாடுகளுக்கு எதிராக அப்போது கொல்லப்பட்ட செர்பியப் பொதுமக்களின் உறவினர்கள் ஐரோப்பிய நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

யூகோஸ்லாவியாவில் இனரீதியான வன்முறைகளிலிருந்து அல்பேனிய மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கை என்று கூறிக்கொண்டு அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளின் படைகள் யூகோஸ்லாவியா மீது கடுமையான விமானத் தாக்குதல்களை நடத்தின.

அத் தாக்குதல்களில் அப்பாவி செர்பியப் பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தப் படுகொலைகளுக்கு எதிராகவே தற்போது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

யூகோஸ்லாவியாவில் செர்பியத் தொலைக்காட்சி நிலையம் ஒன்றின் மீது நேட்டோப் படைகள் நடத்திய விமானக் குண்டு வீச்சில் 16 செர்பியர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இது சர்வதேசப்போர் விதிகளை அப்பட்டமாக மீறிய செயல் என்று சர்வதேச மன்னிப்புச்சபை சமீபத்தில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-ஒ)

# குண்டு வெடிப்புக்கு தீவிரவாதிகளே காரணம்

புதுடில்லி, ஜூலை 19

இந்தியாவில் கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலங்களில் நடந்த குண்டு வெடிப்புகளுக்கு 'தீர்தார் அஞ்சுமான்' என்ற இஸ்லாமியத்தீவிரவாத அமைப்பே காரணம் என்று மத்திய புலனாய்வுப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்.

# கறுப்புப் பெட்டிகள் கண்டுபிடிப்பு

பாட்னா, ஜூலை 19

பிஹாரில் விபத்துக்குள்ளான விமானத்தின் விமானியின் குரல் பதிவுப் பெட்டி மற்றும் பயணத் தகவல் பதிவுப் பெட்டி ஆகியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றை ஆராய்ந்து விமான விபத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்த நீதிபதி ஒருவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் பலியானவர்களில் 50 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. மற்றைய சடலங்கள் மோசமாகச் சிதைந்துள்ளதாகவும், ஆனால் அவற்றை அடையாளம் காணும் முயற்சி தொடர்வதாகவும் மீட்புப் பணி அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

(ஐ-ஒ)

## 11.5 கோடி ரூபா பெறுமதியான
# ஜெயலலிதாவின் சொத்துக்கள் தற்காலிகமாகப் பறிமுதல்



சென்னை, ஜூலை 19

வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கில் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான 11 கோடி 59 லட்சம் ரூபா பெறுமதியான அசையும் சொத்துக்களை தற்காலிகமாகப் பறிமுதல் செய்ய தனி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சொத்துக்களில் ஒரு வீட்டில் உள்ள வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய சொகுசு பஸ் உட்பட 24 வாகனங்களும் அடங்கும்.

இவற்றில் எவையேனும் 3 வாகனங்களை மட்டும் தொடர்ந்து உபயோகிக்க ஜெயலலிதாவுக்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்த போது அவரின் வருமானத்துக்கு ஒவ்வாத வகையில் 66 கோடி 65 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களைச் சேர்த்ததாகக் குற்றஞ்சாட்டி வருமான வரித்துறையால் தொடரப்பட்ட வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

'டான்சி' நிலப்பேர வழக்கில் தனது தரப்பில் சாட்சியமளிக்க ஜெயலலிதா சமர்ப்பித்திருந்த 24 பேரில் 21பேரை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

(ஒ)

## கொத்தணிப் பணியாளர் நலன்கருதி

# கைதான சங்க அலுவலர்களை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தொத்தணியின் கீழ் செயற்படும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்களின் நலன் கருதி கைது செய்யப்பட்ட கொத்தணித் தலைவர் நா. கணேசனையும் பதில் பொது முகாமையாளர் க. சுதாகரனையும் விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலிகாமம் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் தலைவர்திரு. நா. கணேசன், பதில் பொது முகாமையாளர் திரு. க. சுதாகரன் அவர்களும் 13-07-2000 வியாழக்கிழமை பிற்பகல் அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு மீளவும் இவ்விடம் சமுகமளிக்காமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக அவர்கள் 16-07-2000 திகதியில் இருந்து சுன்னாகம் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அவர்களின் உறவினர்களுக்கு இராணுவத்தினரால் தகவல் வழங்கப்பட்டிருப்பது எம்மால் அறிய முடிந்துள்ளது.

இக்கொத்தணியின் கீழ் இயங்கி வரும் சாராய வடிசாலை மூலமாகவே சங்கானை, பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, சுன்னாகம், மானிப்பாய், கோண்டாவில் ஆகிய ஆறு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் ஆயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களாலும் உற்பத்தி செய்யப்படும் கள்ளில் இருந்து மதுசாரத்தை வடித்தெடுத்துச் சாராய ஆக்கத்தைச் செய்து வருவதின் வழியாகவே இவ்வங்கத்தவர்களின் வாழ்வுக்கு ஆக்கபூர்வமாகப் பங்காற்றி வருகின்றது.

இத்தொழிலை நம்பியுள்ளவர்களின் வாழ்வுக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்ட தலைவர், பதில் பொது முகாமையாளர் ஆகியோர், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருக்கும் இந்த இக்கட்டான நிலையில் எமது செயற்பாடுகள் பெரிதும் முடக்கப்பட்டுள்ளமை மிகவும் வருத்தத்திற்குரியது.

கொத்தணியின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடையுமிடத்து இம் முழு அங்கத்தவர்களதும், பணியாளர்களதும், வாழ்வு நலிவுக்குள்ளாகும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இவர்கள் இருவரும் விடுவிக்கப்படுவதன் வாயிலாகவே எமது கொத்தணியின் நடவடிக்கைகளும் தங்கு தடையின்றி நடைபெறுமென எதிர்பார்த்துள்ளோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் G. செல்வராணி (A.C) அவர்களின் அன்புச் சகோதரரான


### அன்ரனி ஜெயராஜா

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உ, நிரோஷன் (பழைய மாணவன்)
உ. நிவேதிகா (ஆண்டு 4)
உ. விதுரஷன் (ஆண்டு 2)

குற்றாலம்,
77/58, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (76523)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி விஷ்ணுசுந்தரம் முத்துமாலை
(சுந்தராக்கா)

தோற்றம் 24-10-1932 மறைவு 20-06-2000

2000—06—20 அன்று சிவபதமெய்திய திருமதி விஷ்ணுசுந்தரம் முத்துமாலை (சுந்தராக்கா) அவர்களின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையும் நினைவஞ்சலி நிகழ்வும் சபிண்டீகரண கிரியைகளும் அமரரின் வாசமனையில் (2000—07—20) நாளை வியாழக்கிழமை நடைபெற உள்ளன. ஆதலினால் வீட்டிலும் சந்நிதியான் ஆச்சிரமத்திலும் நிகழும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகவேண்டுகிறோம்.

மேலும் 2000—06—25 அன்று நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவிக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்

விஷ்ணுசுந்தரம் மாளிகை,
யாழ். வீதி, வல்வெட்டித்துறை. (76502)

## வைத்தியசாலைக்கு புதிய கட்டடம்

நெடுந்தீவு, ஜூலை 19

நெடுந்தீவு ஆயுள்வேத வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடக்கு — கிழக்கு மாகாண ஆயுள்வேதத் திணைக்களம் கட்டடத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-111)

## தெளிகருவி கிடைத்தது

மூளாய், ஜூலை 19

வலிகாமம் மேற்கில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கென இரண்டு தெளிகருவிகளை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழங்கியுள்ளது.

இந்தத் தெளிகருவிகளைப் பெற்றுக்கொண்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், இப்பகுதிகளில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் பகுதிகளிலேயே இவை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஐ-99)

## ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் முப்பத்தொரு ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்பட்ட அன்னையின் படம் தாங்கிய சிறப்பு மலர் வெளியீடு

உலகளாவிய தலைவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மடம் வண. உரிய சுவாமி ரங்கநாத்தானந்தர் மகராஜ் அவர்களுக்கு முதல் பிரதி அனுப்பிவைக்கப்பட்டது.

**மலர் ஒன்றின் விலை ரூபா 100/=**

இம்மலருக்கு அன்பளிப்புச் செய்யப்படும் பணம் அன்னையின் பெயரால் கட்டப்படும் கலாசார மண்டபத்துக்குச் செலவிடப்படும்.

முக்கிய குறிப்பு:

இதுவரையிலும் தமிழ் மக்களின் நலனுக்குச் சேவாச்சிரமம் 40 லட்சம் ரூபாவை பாதிக்கப்பட்ட குடும்பங்கள், குழந்தைகளுக்குச் செலவிட்டது.

செயலாளர்
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
(சி/12256) பருத்தித்துறை.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 30 — 10 — 1953 மறைவு 18 — 07 — 2000

### அமரர் கந்தசாமி தர்மேசன்
(திட்டமிடல் உதவியாளர், வலிகாமம் கல்வி வலயம்)

எமது மன்றத்தின் போசகரும் கழகத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய உப தலைவருமாகிய அமரர் க. தர்மேசன் அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் மறைவு எமக்கு ஒரு பேரிழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய் இந்து இளைஞர் மன்றமும்
மூளாய் உதய சூரியன்
விளையாட்டுக் கழகமும்.

மூளாய். (76534)

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 1953 - 10 - 30 விண்ணில் 2000 - 07 - 18

வலிகாமம் வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் உதவியாளர்

### கந்தசாமி தர்மேசன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலிகாமம் வலய கல்வி அலுவலக
நலன்புரிக்கழக அங்கத்தவர்கள்.

மருதனார்மடம். (76537)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்வி வலயத்திட்டமிடல் உதவியாளர்

### க. தர்மேசன்
(யாழ். மாவட்ட உதவி ஆணையாளர், சாரணியம்)

அவர்களின் மறைவையொட்டித் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவிக்கல்விப்பணிப்பாளர்,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்கள், அலுவலர்கள்.

(76536) சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம்

## உதயன்

### தாழ்வுறும் சிறுவர்

**போர்** நடைபெற்று வரும் தமிழர் பிரதேசங்களில் - வடக்கு - கிழக்கில் - ஒன்பது லட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கவலை தரும் இந்தத் தகவல், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் ('யுனிசெவ்'வின்) வருடாந்த அறிக்கையில் வெளியாகி உள்ளது. கொழும்பில் 'யுனிசெவ்' அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டது.

சிறுவர்கள் நலனில் அக்கறை கொண்ட, அவர்களின் வாழ்க்கை வளமாக அமைய வேண்டும் என்பதற்காகப் பல திட்டங்களை வகுத்துச் செயற்படும் இந்த உலகளாவிய அமைப்பு, வடக்கு - கிழக்குச் சிறுவர்கள் குறித்து மேற்கொண்ட ஆய்வும் அதன் பெறுபேறான தகவல்களும் நம்பத்தகுந்தவை எனக் கொள்ளலாம்.

சிறுவர்களே ஒரு சமூகத்தின், நாட்டின், எதிர்காலப் பிரஜைகள். அவர்களின் ஒழுங்கான, முழுமையான வளர்ச்சியிலேயே நாட்டின் வளமும் முன்னேற்றமும் தங்கியுள்ளன. சிறுவர்கள் உடல் உள வளர்ச்சி பெறும் காலத்தில், கல்வி அறிவு பெறும் காலத்தில், அவர்களின் சகல தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டியவை.

அவர்களுக்குரிய தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றுவதோடு மட்டுமன்றி, அந்தத் தேவைகளை அவர்கள் எய்துவதற்குக் குந்தகமாக இருக்கவும் கூடாது என்பது முக்கியம். சிறுவர்கள் வயதில் குறைந்தவர்கள் என்பதால் - பராயம் அடையாதவர்கள் என்பதால் - அவர்களுக்கு உரிமைகள் இல்லை என்றோ பெரியவர்கள் அவர்களை எப்படியும் நடத்தலாம் என்றோ நினைத்தலாகாது.

போரின் காரணமாகத் தமிழ்ச் சிறுவர்கள் உணவு, தங்குமிட வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி உட்படத் தமது பல தேவைகளை நிறைவேற்ற முடியாமல் - அந்த வசதிகளே இன்றி - மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் போர் இப்போது நீண்டகாலப் போராக மாறிவிட்டது. மக்கள் அழிவும் பொருளாதார நலிவும் ஒரு புறமிருக்க, இராணுவ நடவடிக்கைகள் காரணமாக குடிமக்கள் அடிக்கடி இடம்பெயர்வதால் வாழ்க்கையில் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இடம்பெயரும் போது, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவனது அன்றாட வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகள் எதுவுமில்லாத, வேரறுந்து போன நிர்க்கதி நிலை உண்டாகிறது.

அகதி வாழ்க்கையே இன்று தமிழர்களின் வழமையான வாழ்க்கை என்ற மோசமான (கேவலமான என்றும் கூறலாம்) நிலை உருவாகி உள்ளது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் - போர் தீவிரமாகியுள்ள பகுதிகளில் - சிறுவர்களின் வளமும் நலமும் தாழ்வுற்றுப் போகின்றன. வாழும் வளரும் வயதில், அவர்களின் நாளாந்த வாழ்க்கை சிதைந்து நாசமாகிறது.

போரின் விளைவாகக் குடும்பங்களில் பல வகையான இழப்புக்களும் வந்து பெற்றோர்களின் வாழ்க்கையை நசுக்கிப் பிதுக்கும் போது, அதன் விளைவாகப் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களே.

ஆகையால் போர் தொடருமாயின் வடக்கு - கிழக்கில் சிறுவர் மேலும் பாதிக்கப்படுவார்கள் - தொடர்ந்து பாதிப்புறுவார்கள். அதன் விளைவாக எதிர்காலத்தில், நிச்சயமாக, நோஞ்சான் தமிழர் சமுதாயமே உருவாகும். வலுவற்ற, வளமற்ற, பல மற்ற ஒரு சமுதாயத்தினால், தனக்குக் கிடைக்கக்கூடிய உரிமைகளைத் தானும் அனுபவிக்க முடியாமற் போய்விடும்.

'யுனிசெவ்' சுட்டிக் காட்டிய சிறுவர் பாதிப்பு, இவ்வேளையில் ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வர வேண்டும். மக்களைப் பாதுகாப்பதற்காகவும், மக்கள் விடுதலைக்காகவும் நடத்தப்படுவதாகக் கூறப்படும் போர், எதிர்காலத் தமிழர்களை - இன்றைய சிறுவர்களை - நாசமாக்குவது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. தீர்க்கதரிசனத்துடன் சிந்திக்கப்பட வேண்டிய விடயம் இது. போரை நிறுத்துவதில் இரண்டு தரப்புகளும் மனங்கொண்டு செயற்பட்டாலே எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும்.

---

### யாழ்ப்பாணத்தில் பணிபுரிகின்ற

# டாக்டர்களுக்கு மட்டும் இடர்க்காலக் கொடுப்பனவு; ஆசிரியர்களுக்கு அதனை வழங்க மறுப்பது ஏன்?

## தமிழர் ஆசிரியர் சங்கம் விசனம்

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் சிங்கள டாக்டர்களுக்கு அவர்களின் சம்பளத்தின் நூறு சதவீதத்தை இடர்காலக் கொடுப்பனவாக கடந்த ஆண்டில் வழங்கிய அரசாங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அவர்களின் சம்பளத்தின் பத்து சதவீதத்தை - ஏற்றுக்கொண்டபடி - இடர்காலக் கொடுப்பனவாக வழங்கத் தயக்கம காட்டுகின்றது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் விடுத்துள்ள அறிக்கை. ஒன்றிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அதிபர்கள், ஆசிரியர்களுக்குச் சம்பள நிலுவை மற்றும் இடர்காலக் கொடுப்பனவுகளாக 53 கோடி ரூபா பணத்தை அரசாங்கம் வழங்க வேண்டியுள்ளது.

சம்பள நிலுவைகளாக மட்டும் 20 கோடி ரூபா செலுத்தப்பட வேண்டும்.

1998 ஆம் ஆண்டுக்கான இடர்காலக் கொடுப்பனவாக 3கோடி ரூபா அதிபர்கள், ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டும்.

1999 ஆம் ஆண்டுக்கான இடர்காலக் கொடுப்பனவாக 30கோடி ரூபா வழங்கப்பட வேண்டும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 53 கோடி ரூபா அதிபர்கள், ஆசிரியர்களுக்கு சம்பளநிலுவை மற்றும், இடர்காலக் கொடுப்பனவாகக் கிடைக்க வேண்டும்.

இன்னொரு விதமாகப் பார்த்தால் வடக்கு-கிழக்கு மாகாண அதிபர்கள், ஆசிரியர்கள் 53 கோடி ரூபாவுக்கு கடனாளிகளாக உள்ளனர்.

1995 ஆம் ஆண்டில் இருந்து பயிற்சியை முடித்துக் கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய சம்பளமும், பட்டதாரிப் பட்டம் பெற்றவர்களுக்குப்பட்டதாரிச் சம்பளமும், அதிபர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டதனால் வழங்க வேண்டிய சம்பள உயர்வும் இன்னும் வழங்கப்படாது இருந்து வருகிறது.

இதன் காரணமாகத்தான் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் இவ்வளவு தொகையாக அதிகரித்துள்ளன.

ஏனைய மாகாணங்களிலும் பார்க்க வடக்கு - கிழக்கில் பணிபுரியும் ஆசிரியர்கள், போர்ச் சூழல் காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டே பணிபுரிகின்றனர்.

இதனை ஈடு செய்யும் முகமாகத்தான் 1999 ஆம் ஆண்டின் ஆறுமாத காலப் பகுதிக்கு மாத்திரம் சம்பளத்தின் பத்து சதவீதத்தை இடர்காலக் கொடுப்பனவாக வழங்குவது என்று அரசு சுற்றறிக்கை வெளியிட்டது.

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் சிங்கள டாக்டர்களுக்கு 1999ஆம் ஆண்டில் பன்னிரண்டு மாதங்களுக்கு நூறுசதவீத சம்பளத்தையே இடர்காலக் கொடுப்பனவாக அவர்களின் சம்பளத்துடன் வழங்கிய அரசு, ஆசிரியர்களுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டபடி பத்து சதவீத சம்பளத்தை ஆறு மாத காலத்துக்கு இடர்காலக் கொடுப்பனவாக வழங்குவதற்கு இன்னும் தயக்கம் காட்டுவது ஏன்? இந்த மாதத்துக்கு முன்னர் இக் கொடுப்பனவுகளை ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாது" - என்றுள்ளது. (க)

---

### பளையில் இருந்து இடம்பெயர்ந்த

# ஆயிரத்து 183 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜுலை19

பளை பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உடனடித் தேவைக்கான நிவாரணமாக இரண்டாயிரம் ரூபா வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

யாழ்.நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து வடமாகாண புனர்வாழ்வு அமைச்சர் சரத் அமுனுகமவினால் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டது.

பளை பிரதேச செயலர் பிரிவினைச் சேர்ந்த ஆயிரத்து 183 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக உதவிகள் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏனைய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான விவரங்கள் வடமாகாண புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் -

நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் அவர்களுக்கு இந்த உதவு தொகை வழங்கப்படும் என்றும் -

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஆயிரத்து 500 ரூபாவுக்கு கீழ் வருமானம் பெறும் குடும்பங்களுக்கே இந்த உதவுதொகை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

---

### கலந்துரையாடல்

வலிகாமம் தெற்கு,ஜுலை19

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினரால் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய தென்மராட்சி பாடசாலை மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஐ-152)

---

**உதயவாக்கு**

**ஒரு மனிதனின் வெளித் தோற்றத்தை மட்டும் கண்டு நல்லவனென்றோ தீயவனொன்றோ உறுதி செய்து விடாதே. உள்ளத்தின் பண்பைக் கண்டு முடிவு செய்.**

*- கிருபாணந்த வாரியார்*

---

# நயினை இளைஞன் கொழும்பில் வெள்ளை வானில் கடத்தல்!

கொழும்பு,ஜுலை19

வெள்ளை வானில் வந்தோரால் நயினாதீவு இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கடத்தப்பட்டுள்ளார்.

புறக்கோட்டையில் புதிய சோனகத் தெருவில் உள்ள மாடி வீடு ஒன்றில் வசித்து வந்த பிரஸ்தாப இளைஞன் மாடியில் இருந்த சமயம் அங்கு சென்ற இனந்தெரியாதோர் அவரை விசாரணை செய்த பின் அழைத்துச் சென்று வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வெள்ள வானில் ஏற்றிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளை வானில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்படும் சம்பவங்கள் கொழும்பில் அதிகரித்துள்ளதால் தமிழ் இளைஞர் மத்தியில் பீதிநிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ-3)

---

# மொறட்டுவ மாணவன் கடத்தல்; அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு!

## தொல்லை தவிர்ப்புக் குழு உத்தரவு

வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டுள்ள மொறட்டுவப் பல்கலைக்கழக மாணவன் சதாசிவம் சக்திவேல் அநாகரிகமான முறையில் கடத்தப்பட்டமை குறித்து பூரணமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி தொல்லை தவிர்ப்புக்குழு பிரதிப் பொலீஸ் மா அதிபர் எச்.எம்.பி.கொட்டக தெனியவுக்கு உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர் பட்டி வீரக்கோன் தலைமையில் நேற்று முன்தினம் கூடிய தொல்லை தவிர்ப்புக் குழுவின் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்.யோகராஜன், இரா.சம்பந்தன், எஸ்.சுபைர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"மொறட்டுவப் பல்கலைக்கழக மாணவன் சக்திவேல் வெள்ளை வானில் வந்தோரால் அநாகரிகமான முறையில் கைது செய்யப்பட்டுள்ளார். தற்சமயம் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பில் அவர் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் தொடர்பான விவரங்களை உடன் வெளியிட வேண்டும்" என்று இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

"குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட விஞ்ஞான, கைத்தொழில் அமைச்சர் சி.வி குணரத்தினவின் கொலையுடன் பிரஸ்தாப மாணவன் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. அதனால் அவர் தொடர்ந்து விசாரிக்கப்படுகிறார்" என்று அங்கு சமுகமளித்த பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொட்டகதெனிய தெரிவித்தார்.

பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்புடைய ஒருவரைக் கைது செய்தால், 24 மணி நேரத்துக்குள் அவரைச் சட்டத்தரணி பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்றும் -

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் அவர்களைக் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்றும் -

அங்கு சமுகம் அளித்த பயங்கரவாத நடவடிக்கைப் புலனாய்வு பிரிவின் பொறுப்பாளருக்குத் தொல்லை தவிர்ப்புக்குழு உத்தரவு வழங்கியது. (ஐ-3)

---

**நாளை**

ஆடி 5

வியாழக்கிழமை

*திதி:* சதுர்த்தி

பின் இரவு 1.25 வரை

*நட்சத்திரம்:* சதயம்

முன் இரவு 9.09 வரை

*சங்கட ஹர சதுர்த்திவிரதம*

*சுபநேரம்:* 7.31 - 9.01

*ராகுகாலம்:* 1.31 - 3.01

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

# எழுவைதீவு மக்களுக்கு விரைவில் நீர் விநியோகம்

காரைநகர், ஜுலை19

எழுவைதீவுக்கு குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் நான்கு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியினை வழங்கியுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி ஊர்காவற்றுறைப் பகுதியில் இருந்து படகு மூலம் குடிதண்ணீர் கொண்டு சென்று குழாய் மூலம் விநியோகிக்கப்படவுள்ளது. அதற்காக எழுவை தீவில் நீர்த்தாங்கி அமைக்கும் பணி நடைபெற்று வருவதாக அனலை தீவு கிராம அலுவலர் எஸ். இராசதுரை தெரிவித்தார்.

கோடை காலங்களில் அங்கு குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் மக்கள் நீரை தூரவுகளில் இருந்து வடித்தெடுத்தே பயன்படுத்திக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இங்கு 153 குடும்பங்களைச் சேர்ந்த 576 பேர் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-73-111)

---

# அம்பாறையில் 3 இளைஞர்களை காணவில்லையென முறையீடு

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவைச் சேர்ந்த இரு மாணவர்கள் உட்பட மூன்று இளைஞர்களை கடந்த சனிமுதல் காணவில்லை என்று அவர்களது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களான இராசா கோகுலதாசன் (வயது19) பேரின்பநாதன் சுதாகரன்(வயது 19) 'சீடா' தொண்டர் நிறுவனத்தில் பணிபுரியும் இராசமாணிக்கம் பாஸ்கரன்(வயது18) ஆகியோரே காணாமல் போயுள்ளவர்களாவர்.

இவர்கள் தொடர்பான முறைப்பாட்டை அடுத்து மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் கல்முனை படைமுகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டதாகவும்-

பிரஸ்தாப நபர்களைத் தாம் கைது செய்யவில்லை என அவர்கள் பதில் அளித்ததாகவும்-

தெரிய வந்தது. (ஐ-3)

---

# ரணில் - சந்திரிகா வார இறுதியில் மீண்டும் சந்தித்துப் பேசுவர்

கொழும்பு,ஜுலை19

புதிய அரசமைப்பு யோசனைகள் தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இவ்வார இறுதியில் மீண்டும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளன.

இருதரப்பும் இணக்கம் கண்ட விடயங்களில் காணி, நாட்டின் ஆட்சித் தன்மை, வடக்கு - கிழக்கு இணைப்பு ஆகியன தொடர்பாக, தமிழ்க்கட்சிகள் தெரிவித்துள்ள அதிருப்தி தொடர்பாக ஆராயவே இந்தச் சந்திப்பு இடம்பெறுகின்றது.

அதேசமயம் - நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் சந்தித்து தமிழ்க்கட்சிகள் தெரிவித்துள்ள விடயங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

வார இறுதியில் இடம்பெறும் கலந்துரையாடலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2000
## வினாத்தாள் இல. 4

தரம் 5 **பகுதி I** நேரம்:- 45 நிமி.

★ **01-03 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடை தருக.**

(1) *மனிதர் வெறுக்கும் சேற்றிலே*
*மலர்ந்து நிற்கும் தாமரை*
*ஆதவனைக் கண்டதுமே*
*கண்டு களித்து மகிழ்ந்திடுமே.*

இப்பாடல் "பூ" பற்றியது என்றால் தாமரை என்னும் சொல்லின்கீழ் கோடிடுங்கள். அவ்வாறின்றி இங்கு கூறப்பட்டது 'ஆதவன்' பற்றியது என்றால் ஆதவன் என்ற சொல்லைச் சுற்றி வட்டம் இடுங்கள்.

(2) *பாட்டி வீட்டுப் பழம்பானை - அந்தப்*
*பானையின் ஒருபுறம் ஓட்டையா*
*ஓட்டை வழியொரு சுண்டெலியும்*
*உள்ளே புகுந்து நெல் தின்றதா*

இப்பாடலில் பானையின் உள்ளே இருந்தது சுண்டெலி எனின் சுண்டெலி எனும் சொல்லைச் சுற்றி வட்டமிடுங்கள். அப்படியன்று நெல் ஆயின் நெல் எனும் சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.

(3) *சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா*
*செல்வக் களஞ்சியமே*
*என்னைக் கலிதீர்த்தே*
*ஏற்றம் புரிய வந்தாய்*

இப்பாடல் 'கிளி' பற்றியது என்றால் சிறுகிளியே எனும் சொல்லின்கீழ் கோடு இடுங்கள். அவ்வாறு இன்றி ஒரு 'பிள்ளை' பற்றியது என்றால் கண்ணம்மாவைச் சுற்றி வட்டமிடுங்கள்.

★ **04-07 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

*வானிலை பற்றிய வானொலி அறிவித்தல்:-*
"நாளை நாட்டின் வடமேற்குப் பகுதியில் ஆங்காங்கே(1)....... கூடிய மழை பெய்யக்கூடும். காற்று மணிக்கு(2)............... வேகத்தில் வீசக்கூடும் கடல் (3)......... இருக்கும். ஆகவே நாளையதினம் (4)....... கடலுக்குச் செல்லவேண்டாம் என அறிவுறுத்துகின்றோம்."

(4) முதலாவது இலக்கமிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்
(1) இடியுடன் (2) சோவென (3) மின்னலுடன்

(5) இரண்டாவது இலக்கமிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்
1) 60 லீற்றர் 2) 60 கிலோ கிராம் 3) 60 கிலோ மீற்றர்

(6) மூன்றாவது இலக்கமிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்
1) ஆவேசமாக 2) கொந்தளிப்பாக 3)அமைதியாக


(7) நான்காவது இலக்கமிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்
1) விவசாயிகள் 2) மீனவர்கள் 3) மாணவர்கள்


★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக?**


(8) இராமன் மிகவும் நல்லவன். ஆயினும் சில வேளைகளில் நண்பர்களின் புத்தகங்களை எடுத்து வேறு நண்பரின் மேசைக்கு அடியில் வைத்து விட்டு தேடி அலைவதைப் பார்ப்பான். பின்னர் உண்மையைக் கூறிவிடுவான். இராமனைப்பற்றி குறிப்பிடுவதற்கு பொருத்தமான சொல்.
1) திருடன் 2) ஆவேசக்காரன் 3) குறும்புக்காரன்
4) பைத்தியக்காரன்


(9) ஐந்தாம் ஆண்டில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து தாம் பாடசாலைக்கு வரும் பாதையில் தமக்கு இடையூறாக இருந்த பெருங்கல் ஒன்றை ஓரத்தில் ஒதுக்கி விட்டார்கள். இந்நிகழ்வுக்குப் பொருத்தமான பழமொழி.
1) சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது.
2) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
3) ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவுமா?
4) விளையும் பயிரை முளையிலே தெரியும்.


★ **10-15 வரையுள்ள வினாக்களில் நான்கு படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று ஏனைய மூன்று படங்களுடனும்,பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. அதனைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(10) 

(11) 

(12) 

(13) 


(14) 

(15) 

★ **ஒவ்வொரு வினாவிலுமுள்ள நான்கு படங்களையும் சரியான ஒழுங்கில் வரிசைப்படுத்தக்கூடிய விடையின் கீழ் கீறிடுக.**

(16) A B C D


1) B,C,A,D 2) D,A,B,C 3) A,D,B,C 4) C,B,A,D

(17) A B C D

1) A,B,C,D 2) B,C,D,A 3) B,C,A,D 4) C,A,B,D


(18) A B C D

1) C,D,A,B 2) B,C,A,D 3) D,C,B,A 4) B,C,D,A


★ **சரியான விடையைத் தெரிவு செய்க**





இடப்பக்கத்தில் கொடுக்கப்பட்ட கணிதச்செய்கைக்கு சமனான பெறுமதிக்குரிய பொருளின் கீழ்க்கீறிடுக.

(19) 



(20) 


(21) 



(22) இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

1) 5/3 2) 2/5
3) 2/10 4) 3/10

(23) ஐந்து வருடங்களுக்கு முன் அனின், சுனின் இருவரதும் வயதுகளின் கூட்டுத்தொகை 50. இன்னும் ஐந்து வருடங்களின் பின் அவர்களிருவரது வயதுகளின் கூட்டுத்தொகை என்ன?
1) 80 2) 70 3) 60 4) 55


(24) 
வட்டவடிவக் கடதாசி ஒன்று நான்காக மடித்து வெட்டப்பட்டுள்ளது. இதை விரித்தபோது தோன்றும் தோற்றம்:-





★ **25-28 வரையுள்ள வினாக்களில் முதல் இரண்டு படங்களிலும் உள்ள இலக்கங்களுக்கிடையிலான தொடர்பினை அவதானித்து மூன்றாவது உருவமைப்பத்தில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்கு பொருத்தமான இலக்கத்தினைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(25) 

1) 28 (2) 37 (3) 41


(26) 

1) 7 (2) 4 3) 8

(27) 

1) 4 2

★ **இவ்வரிப்படம் ஒரு பாடசாலை... கான ஐந்து நாள்களில் நே...**




 - தமிழ்  - விஞ்ஞானம்


(28) சமனான நேரம் ஒதுக்கப்...
1) விஞ்ஞானம், சங்கீதம்
3) கணிதம்,தமிழ்

(29) மிகக் குறைவான நேரம்...
1) சங்கீதம் 2) விளையா...


(30) சங்கீதம் நடைபெறும் கால... நடைபெறும் பாடம்:-
1) தமிழ் 2) கணிதம் 3)

★ **கீழே தரப்பட்டுள்ள உருக்க... பொருத்தமான விடையை அ... செய்து அதன் இலக்கத்தை...**

(31) 

(32) 


(33) நீரியல் வட்டத்திற்கான ... விளக்கத்தின் இலக்கத்தை...





(34) கடற்காற்று வீசுதலின் ச... விளக்கத்தின் இலக்கத்...






★ **35-40 வரையான வினாக்க... குறியீட்டு உருக்களைப் பயன்...**





அடுத்துவரும் மூன்று ... குறியீட்டு உருக்களில் ... உருக்களில் ஒன்றும் ... தரும். அந்த குறியீட்டு ...

(35)  மைத்...

(36)  வானெ...


(37)  தே...

கீழ்வரும் குறியீட்டு உரு... எழுதுக

(38)  ....


(39)  ....

(40)  ....




2) 5 3) 6


பாடசாலை மாணவர்களின் 6 பாடங்களுக்
ளில் நேர ஒதுக்கீட்டை விபரிக்கின்றது.





ஒதுக்கப்பட்ட பாடங்கள்:-
சங்கீதம் 2) விளையாட்டு, தமிழ்

நேரம் ஒதுக்கப்பட்ட பாடம்:-
விளையாட்டு 3) தமிழ்
றும் காலத்தைப்போல இருமடங்கு காலம்
ம்:-
தம் 3) விஞ்ஞானம்

உருக்களுள் நான்காவது கூட்டிற்குப்
டயை அருகில் உள்ள படத்தில் தெரிவு
க்கத்தை வெற்றுக் கூட்டுக்குள் எழுதுக.





ற்கான சரியான பாய்ச்சற் கோட்டுப்பட
க்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக?





(.....................)

லின் சரியான பாய்ச்சற் கோட்டுப் பட
க்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக?




(.....................)

வினாக்களுக்கு விடையளிக்க கீழேயுள்ள
பயன்படுத்துக.





ற்று வினாக்களிலும் முதல் இரண்டு
ளில் ஒன்றும் அடுத்த இரண்டு குறியீட்டு
ம் சேர்ந்து ஒரு பூரண வசனத்தைத்
ட்டு உருக்களின் கீழ் கோடிடுக.

மைதானத்தில்

வானொலி

தேநீர்



உருக்கள் குறிப்பிடும் வாக்கியங்களை

.......................................................................

.......................................................................

.......................................................................

## பகுதிII

1மணி 15 நிமிடம்

★ கீழ்வரும் பாடலை வாசித்து 1 முதல் 7 வரையான வினாக்களுக்கு விடை தருக?

*மீனினம் ஓடிப்பரக்குதம்மா ஊடே*
*வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா*
*வானுங் கடலாக மாறுதம்மா - அந்த*
*மாட்சியில் உள்ளம் முழுகுதம்மா.*

(1) இங்கே கவிஞர் வெள்ளி ஓடம் என்று எதனை உவமிக்கிறார்?

.......................................................................

(2) வானம் எதைப்போன்று காணப்படுகின்றது?

.......................................................................

(3) மீன் எதற்கு ஒப்பாகக் கூறப்படுகின்றது?

.......................................................................

(4) பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக?

.......................................................................

(5) வினைச்சொல் ஒன்றை எழுதுக?

.......................................................................

(6) பின்வரும் சொற்களுக்கு பொருத்தமான ஒத்தகருத்துச் சொல்லை பாடலிலிருந்து தெரிவு செய்து எழுதுக?


(1) அழகு ...................... (3) சாகரம் ..........................
(2) மனம் ...................... (4) ஆகாயம் ..........................

(7) இப்பாடல் நாளொன்றில் எப்பொழுது நடைபெறும் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறது?

.......................................................................

★ கீழ்வரும் ஒவ்வொரு படத்திலும் காட்டப்படுபவைகளுக்குரிய ஆங்கிலப் பெயரை எழுதுக?

(8) (9) (10) (11)




.................. .................. .................. ..................

★ கீழ்வரும் பாடலைக் கவனித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.


*"சேவல் கூவும் காகம் கரையும்*
*செக்கச்சிவந்த சூரியனும்*
*ஏவல்புரிய உலகை நோக்கி*
*எழுந்து வருவான் அதிகாலை"*

கீழ்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒத்தகருத்துடைய வேறு ஒரு சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக?

(12) சூரியன் .................. (13) உலகம் ..........................
(14) ஏவல் .................. (15) அதிகாலை ..........................

கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொல்லுக்கு பொருத்தமான தமிழ் சொல்லை பாடல் வரியில் இருந்து தெரிவு செய்க?

(16) Sun .................. (17) Crow ..................
(18) World .................. (19) Cock ..................
(20) Morning ..................




★ஞாயிற்றுக்தொகுதியின் படத்தைப் பார்த்து கீழே தரப்படும் வினாக்களுக்கு விடையளிக்குக?

(21) அதிக துணைக்கோளையுடைய கோள் :- ..........................
(22) ஒளிவளையம் உள்ள கிரகம் :- ..........................
(23) செங்கோள் என அழைக்கப்படும் கிரகம்:- ..........................
(24) இங்குள்ள கோள்களில் மிகப்பெரியது:- ..........................
(25) பூமி தன்னைத்தானே சுற்றுவதால் ஏற்படும் மாற்றம் எவ்வாறு அழைக்கப்படும்? ..........................

★ கீழ்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் சரி (✓) என்றும் பிழையாயின் பிழை (×) என்றும் அடையாளத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக?

(26) கவரொட்டி ஒன்றை சுற்றாடல்தினம், மரநடுகைதினம், உலகசிறுவர்தினம் போன்ற விசேட சந்தர்ப்பங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ( )
(27) வெட்டுக்குத்துத் தையலைப் பயன்படுத்தி தலையணை உறை, கைக்குட்டை, மெத்தை உறைகள் என்பவற்றை அலங்கரிக்கலாம். ( )
(28) நமது நாட்டின் தேசிய கீதம் நாட்டின் பெருமையையும் கௌரவத்தையும் பிரதிபலிப்பதில்லை. ( )
(29) கடதாசி ஒன்றில் நீர் வர்ணத்துளிகளை இட்டு அதன்மேல் வேகமாக ஊதுவதன்மூலம் பற்றிக் அலங்காரம் செய்யலாம். ( )
(30) உடுக்கு, துந்தன், ஒத்துதாளம் என்பன நாட்டார் பாடல் வகைக்கேற்ற இசைக் கருவிகளாகும். ( )
(31) களகுநடனம் கிராமிய நடனங்களில் ஒன்றாகும். ( )
(32) நடன நாட்டியங்களில் உடல் இசை லயத்துக்கு ஏற்ப அசைந்தாடி புலனுறுப்புகளும் அசைந்து எந்தவொரு விடயமும் வெளிப்படுத்தப்படுவதில்லை. ( )
(33) முதலாமவர் இரண்டாமவரின் முழங்கால்களுக்கருகில் பிடிக்க இரண்டாமவர் தனது இரு கைகளால் நடத்தற்செயற்பாடு ஒற்றைச்சில்லு வண்டியாகும். ( )
(34) பொம்மலாட்டம் மூலம் ஆக்காண்டி கதைப்பாடலை ஆடமுடியாது. ( )
(35) 'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி' ஒரு தேசிய கீதப் பாடலாகும். ( )

**(36)** **எமது நாளாந்த நடவடிக்கையின்போது இடம் பெறுகின்ற சில சம்பவங்களை அட்டவணையின் முதலாவது கூட்டிலும் அச்சம்பவங்கள் நிகழ்வதற்கான காரணம் மூன்றாவது கூட்டிலும் ஒழுங்கில்லாமல் தரப்பட்டுள்ளன. ஆகவே மூன்றாவது கூட்டில் சரியானவற்றைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை இரண்டாவது கூட்டில் எழுதுக?**

| சம்பவம் | இல. | பெறுபேறு |
|---|---|---|
| புகைபோக்கி கட்டடத்தை விட உயரமாக இருத்தல். | --- | (1) ஒளி, வெப்பம் |
| மின் தொழிலாளி இறப்பர் கையுறையை பயன்படுத்தல். | --- | (2) நீர் நீராவியாக இடம்பெயர்தல் |
| (3) கோடை காலங்களில் வெள்ளைநிற உடை அணிதல். | --- | (3) சூழலைப் பாதுகாக்க |
| (4)மின்குமிழ் வெளிவிடுவது | --- | (4) மின்கடத்தாது |
| (5)காற்றோட்டத்தில் உடை விரைவாக காய்தல். | --- | (5) வெப்பத்தை உறிஞ்சாமல் திருப்பி தெறிக்க வைக்க. |

★ கமலனின் தாயார் தனது வீட்டுப் பொருட்களை வாங்கிய பற்றுச் சீட்டு கீழே காட்டப்பட்டுள்ளது. அதன்படி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக?

இல.308
முரளி பலசரக்குக்கடை 20.04.2000
கம்பகா

| அளவு | விபரம் | காசு ரூ-சதம் |
|---|---|---|
| 5கிலோ 500கிராம் | சீனி | 220.00 |
| 4கிலோ 400கிராம் | கோதுமைமா | 96.00 |
| 6கிலோ 750கிராம் | அரிசி | 202.50 |
| 2கிலோ 250கிராம் | மைசூர்ப்பருப்பு | 135.00 |
| 6லீற்றர் | ம.எண்ணெய் | 60.00 |
| 8பைக்கற் | பிஸ்கட் | 160.00 |
| | மொத்தம் | |

(37) கமலனின் தாயார் பொருட்களை வாங்கி வருவதற்காக செலவு செய்த மொத்தப்பணம் எவ்வளவு என்பதைச் சொற்களில் எழுதுக? ..........................

.......................................................................

(38) முரளி பலசரக்குக்கடை அமைந்துள்ள மாகாணம் எது? ..........................
(39) 1 லீற்றர் மண்ணெண்ணெயின் விலை எவ்வளவு?
ரூபா .............. சதம் ..................
(40) 1 1/2Kg சீனியின் விலை எவ்வளவு?
ரூபா .............. சதம் ..................
(41) 3 பைக்கற் பிஸ்கட் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்? ரூபா .............. சதம் ..................
(42) 500g மைசூர்ப்பருப்பின் விலை எவ்வளவு?
ரூபா .............. சதம் ..................
(43) 3 பைக்கற் பிஸ்கட் வாங்கும் பணத்திற்கு எத்தனை லீற்றர் மண்ணெண்ணெய் வாங்கலாம்? ..................
(44) கமலனின் தாயார் கடையில் வாங்கிய பொருட்களின் பற்றுச்சீட்டு எம்மாதத்திற்குரியது? ..................

★ கீழ்வரும் ஒவ்வொரு சொல்லிலும் உள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான எழுத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக?

(45)  P__nc__l (46)  Um__re__la

(47)  K__t__ (48)  F__o__er

★ (49-54) "நான் ஒரு சாரணியத் தலைவன்...." எனும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஆகக்குறைந்தது ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களேனும் அமைதல் வேண்டும்.

.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................

தயாரிப்பு:-
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
ஆரம்பப்பிரிவு ஆசிரியர் குழு.

# தமிழக முகாம்களில் தங்கியிருக்கின்ற ஈழ அகதிகள் நிலை மிகமோசம்!

சென்னை, ஜூலை19

இலங்கையில் இருந்து தமிழகம் வந்து அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சிறிய சிறிய அறைகளுக்குள் அவர்கள் முடங்கிக் கிடப்பதாகவும்-

அடிப்படை வசதிகளைப் பெறுவதில் அவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முகாம்களில் உள்ள சிறுமிகள் பராயமடையாத நிலையில் திருமணம் செய்வதாகவும் -

சிறுவர்கள் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் -

செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் -

யாழ்ப்பாணத்தில் போர் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து கடந்த இரு மாதங்களில் இரண்டாயிரம் பேர் அகதிகளாக வந்துள்ளதாக தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-3)

# கிழக்கிலங்கை பல்கலைக்கழக மாணவர் வகுப்பு பகிஷ்கரிப்பு

## பீடாதிபதி வேலை நீக்கத்துக்கு ஆட்சேபம்

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி கலாநிதி ரி.ஜெயசிங்கத்தை வேலை நீக்கம் செய்ததைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்தனர்.

முன்னாள் துணைவேந்தரை அவமதிக்கும் வகையில் செயற்பட்டதாகவும் -

செய்தியாளர் மாநாடு நடத்தி பல்கலைக்கழகத்துக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபட்டதாகவும் - தெரிவித்து அவரை பல்கலைக்கழக மூதவை வேலை நீக்கம் செய்திருந்தது. இதைக் கண்டித்தே போராட்டம் ஆரம்பித்துள்ளது. அவருக்கு மீண்டும் வேலை வழங்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்று மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், கல்விசாரா ஊழியர் சங்கம் ஆகியனவும் போராட்டத்தில் இணைந்துள்ளன. (இ-3-21)

# புற்றளை பாடசாலையில் இருந்த மக்களுக்கு மாற்று ஏற்பாடு

வடமராட்சி,ஜூலை19

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த 56 குடும்பங்களைச் சேர்ந்தோர் வித்தியாலயத்தின் வசதி கருதி வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

புற்றளை மகா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான வகுப்புக்களை சீராக இடைஞ்சல்கள் ஏதும் இன்றி நடத்த வசதியாக இடம் பெயர்ந்து தங்கியுள்ள மக்களை வேறு இடங்களுக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

பருத்தித்துறை பிரதேச செயலரின் பணிப்பில் புலோலி கிழக்கு கிராம சேவையாளர் தி.சுபேந்திரராஜா உரிய நடவடிக்கைகளை எடுத்தார்.

உபய கதிர்காமம், மந்திகை, பல்லப்பை ஆகிய இடங்களில் கைவிடப்பட்ட மூன்று வீடுகள், புற்றளை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் புற்றளை தனியார் சுருட்டுத் தொழிற்சாலைக் கட்டடம் ஆகியவற்றில் இடம் பெயர்ந்த 56 குடும்பங்களைச் சேர்ந்த 196 பேரைத் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பழுதடைந்த நிலையில் இருந்த மூன்று கைவிடப்பட்ட வீடுகள், கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டடம், தனியார் சுருட்டுத் தொழிற்சாலைக் கட்டிடம் என்பனவற்றை திருத்திப் புனரமைக்க புற்றளை கிராமத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் போதிய உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்கினார்கள். இப்புனரமைப்புக்கு பருத்தித்துறை பிரதேச செயலகம் 50 கூரைத்தகடுகளை வழங்கியிருந்தது.

வீடுகள், கட்டடங்களில் உள்ள எட்டுக் கிணறுகளை பருத்தித்துறை பிரதேசசபை துப்புரவு செய்து கொடுத்தது. (ஐ-173)

## கிராம அலுவலர் நேர்முகத் தேர்வு

வலிவடக்கு,ஜூலை19

கிராம அலுவலர்களை தரம் ஒன்றுக்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்த வாரம் முதல் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது கிராம அலுவலர் சேவை தரம் இரண்டில் கடமையாற்றி பதினைந்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-86)

## ஓய்வூதியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை19

பச்சிலைப்பள்ளிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியர் நலன் புரிச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் புலோலி கமநல சேவை நிலையத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலக உபஅலுவலகத்தில் நடைபெறும்.

இந்தப் பிரதேச ஓய்வூதியர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (க)

## விளையாட்டு விழா

வலிகாமம்தெற்கு,ஜூலை19

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் பாடசாலை விளையாட்டுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணிக்கு உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

மன்றத்தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி முகாமையாளர் ச.ரவீந்திரா பிரதம விருந்தினராக

சனசமூக அபிவிருத்தி உ... யோகத்தர் செல்வி இ. சிவயோகம் சிறப்பு விருந்தினராகவும் -

கலந்து கொள்கின்றனர்.(ஐ-152)

## பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

யாழ்ப்பாணம்,ஜூலை19

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருப்பவர்களின் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திலும் -

21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்திலும் -

இம் மீளாய்வு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. மீளாய்வுக்கு வங்கிக் கணக்குப் புத்தகம், புதிய, பழைய பங்கீட்டு அட்டைகள், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் பிரதான குடியிருப்பாளரை சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி கேட்டுள்ளார். (க)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ்.மாநகரசபை சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த மருத்துவர் ஒருவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள போரைதீவு மத்திய ஆயுர்வேத வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ-9)



புலோலி தெற்கு சிங்க நகர் இடம்பெயர்ந்தோர் முகாமில் உள்ள சிறுவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பால் வழங்கி வருகிறது. சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ருபானந்தா பிள்ளைகளுக்குப் பால் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)



அண்மையில் கோப்பாய்ப் பகுதியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்க் கிளையினரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார அமைப்பாளர்களுக்கான பயிற்சி நிலையத்தினை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி றோப்ருவான் நாடாவினை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.சண்முகநாதன் மற்றும் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

படம்:- பொ.இராஜேஸ்வரன்


### மேகாஸ் வீடியோ சென்ரர்

T.V, டெக், CD ஓடியோ, CD வீடியோ, DISH அன்ரனா, செய்மதி ரிசீவர் மற்றும் HIFI DIGITAL எலக்ரோனிக்ஸ் சாதனங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படுவதுடன், உயர் தொழில் நுட்பத்துடனும் மங்களகர நிகழ்வுகளை வீடியோவில் பதிவு செய்து கொள்ளவும்.

அன்றும்! இன்றும்! என்றும்!

நீங்கள் நாடவேண்டிய இடம்:

மேகாஸ் வீடியோ சென்ரர்

No. 23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(76527)

### அறியத்தருகின்றேன்

கைதடி இனுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோயில் குருக்களயோ. குருசாமிக்குருக்கள் ஆகிய யான் கீழ்க்காணும் விலாசத்தில் தங்கி இருக்கின்றேன் என்பதனை கைதடி வாழ் மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

* உமாசுதசர்மா

மஞ்சவனப்பதி முருகன் கோயில் அருகில்,

இல. 155, காங்கேசன்துறை வீதி,

கொக்குவில்.

(76522)


### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்

திரு. கி. தங்கேஸ்வரன் அவர்களின்

பாசமிகு தாயார்

திருமதி செல்லம்மா கிட்டிணர்

16-07-2000 ஞாயிற்றுக்கிழமை காலமாகியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை, வரணி.

(76525)


### மணமகள் தேவை

லண்டனில் வசிக்கும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞனுக்கு மணமகள் தேவை. அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 1060,

மே/பா உதயன்.

(76450)

கையிருப்பு முடியும் வரை

சண்டெக் சிலிப்பர் / சண்டெக் சண்டில் இந்தியா } 150/=

DSI, பாட்டா றபர் - 55/=

மற்றும் பாதணிகளை நியாய விலையில் பெற்றுக் கொள்ள

### வண்ணக் கலணிப் பூங்கா

பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி

(76531)


உ

### ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

துன்னாலை வடக்கு, புலோலி.

பரந்தாமன் பக்தர்களுக்கு!

எமது ஆலயத்தில் பல திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திருப்பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு பக்தர்களின் ஒத்துழைப்பைப் பெற ஆலய தர்மகர்த்தா சபை விரும்புகின்றது. எனவே பின்வரும் திருப்பணிகளில் பங்களிப்புச் செய்து பரந்தாமனின் அருளைப் பெறுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். திருப்பணிகளில் பங்களிப்புச் செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலய நிர்வாக கருமபீடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். நாம் எந்தவொரு நபருக்கும் நிதி சேகரிப்பதற்கு அனுமதி வழங்கவில்லை.

**பங்களிப்புச் செய்ய வேண்டிய திருப்பணிகள்**

1. வசந்த மண்டப பண்டிகைத் திருப்பணி
2. வசந்த மண்டபத்திற்கு தீந்தை, மையூசுதல்
3. நிலத்திற்கு பளிங்குக்கல் பதித்தல்

தர்மகர்த்தா சபை,

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில்.

(C/12253)

### கண்ணீர் அஞ்சலி

எமது கட்டடத்திணைக்களத்தில் கடமைபுரியும்

திரு. கி. அம்பிகாநிதி

அவர்களின் தாயார்

திருமதி செல்லம்மா கிட்ணர்

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டடத் திணைக்கள அலுவலர்களும் ஊழியர்களும்.

(76530)

# அரசின் தீர்வுயோசனைகளில் தளர்வு ஏற்படுத்துமாறு நாம் கோரவில்லை

## ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 19

1997 ஆம் ஆண்டு அரசு முன் வைத்த யோசனைகள் மற்றும் அந்த யோசனைகள் தொடர்பாக ஐ. தே. க. சமர்பித்த மாற்று யோசனைகள் ஆகியவற்றை மையமாக வைத்தே அரசுக்கும்-ஐ. தே. கவுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றன. அரசின் யோசனைகளில் தளர்வு ஏற்படுத்துமாறு நாம் கோரவில்லை.

ஐ. தே. க. தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ. தே. கவின் ஆதரவைப் பெறவே அரசமைப்பு யோசனைகளில் தளர்வு ஏற்படுத்தியதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தங்களிடம் தெரிவித்ததாக தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் வீ. ஆனந்தசங்கரி கூறிஇருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறுகூறினார்.

ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் முன் வைத்த யோசனைகளில் தளர்வு ஏற்படுத்துமாறு நாம் கோரவில்லை. எமது நிலைப்பாடு தொடர்பான யோசனைகளை முன் வைத்தே பேசினோம்.

97 ஆம் ஆண்டு அரசு முன் வைத்த யோசனைகள் மற்றும் அந்த யோசனைகள் தொடர்பாக ஐ தே.க. சமர்பித்த யோசனைகள் ஆகியவற்றை மையமாக வைத்தே பேச்சு இடம்பெற்றதே தவிர எந்தவித தளர்வையும் ஏற்படுத்துவது தொடர்பாகப் நாம் எதையும் கேட்கவில்லை.

இதுவரை இணக்கம் காணப்பட்ட சில விடயங்களில் இன்னமும் பேசவேண்டும். ஒவ்வொரு அம்சத்தையும் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்தோம். எந்த விடயத்திலும் தளர்வு செய்யுமாறு நாம் வற்புறுத்தவில்லை.

அது மட்டுமன்றி பேச்சுக்களின் போது எந்தவித புதிய யோசனைகளையும் நாம்முன் வைக்கவில்லை.

இறுதிக்கட்டப் பேச்சின் போதே இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விடயம் எடுக்கப்பட்டது.

இருதரப்புப் பேச்சுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கம் தொடர்பாக தமிழ்க் கட்சிகளுடனும் மகாசங்கத்தினருடனும் பேச வேண்டும்.

அதன்பின்னர் இந்தஇணக்கப்பாட்டை விடுதலைப் புலிகளுக்கு முன்வைப்பது என்று இறுதிப் பேச்சில் இணக்கம் காணப்பட்டது.

தற்சமயம் அரசு தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துகின்றது. அடுத்து மகாசங்கத்தினருடன் பேச வேண்டும்.

தமது கொள்கைகளுக்கு முரண்பாடாக அரசு ஐ. தே. கவும் இணக்கப்பாடு கண்டுள்ளன என்று தமிழ்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. இந்த விடயங்களை அரசுடன் நடக்கும் பேச்சில் கவனத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

இந்த உடன்பாட்டை விடுதலைப்புலிகளுக்கு முன் வைப்பது குறித்து அரசு தான் முடிவு செய்யவேண்டும்.

அனைத்து விடயங்களிலும் எமது ஆலோசனைகள் மட்டுமே முன்வைக்கப்படுகின்றன. அவற்றைத் தீர்மானிக்கும் பொறுப்பு அரசவசமே உள்ளது.

இதுவரை இணக்கம் காணாத விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் பேச வேண்டியுள்ளது

இதுவரை எட்டப்பட்ட இணக்கம் ஐ தே கவின் வற்புறுத்தலில் மேற்கொள்ளப்படவில்லை. இருதரப்பும் பேசியே அவை எட்டப்பட்டன—என்றார்.

(இ-3)

## ஜனாதிபதி சந்திரிகா சொல்கிறார்:

# எமது அரசு தீர்வைத் தராது என வெளிநாட்டுத் தமிழர் நினைக்கின்றனர்

"இனப்பிரச்சினைக்கு எனது அரசினால் தீர்வு காணமுடியாது எனநினைத்து வெளிநாட்டில் உள்ள சில தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்குகின்றனர். மேலும் சிலர் கட்டாயத்தின் பேரில் நிதி வழங்குகின்றனர். ஆனால் இப் பிரச்சினைக்கு அரசமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் தீர்வு காண முடியும் என நாம் நம்புகின்றோம்"

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது அங்கவீனமுற்ற,பலியான மற்றும் காணாமற்போன படையினரின் உறவினர்களுக்கு காணி உறுதி வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது. அங்கு உரை நிகழ்த்திய வேளை ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாம் மேற்கொள்ளும் சமாதான முயற்சி கடைசிக் கட்டத்தை அடைந்துள்ளது. உத்தேச அரசமைப்புக் குறித்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பதின்மூன்று கட்சிகளுடன் கூட்டாகவும், தனியாகவும் வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் இணக்கத்துடன் புதிய உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் இன்றும் சிற்சில மாற்றங்களே செய்ய வேண்டியுள்ளன. எதிர்வரும் சில வாரங்களில் அரசமைப்புத் தீர்வு அடங்கலாக புதிய உத்தேச அரசமைப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக்கப்படும்.

அதற்கு ஐ தே. கவும் ஒத்துழைப்பு வழங்கும் என நம்புகின்றோம். ஆனால் அது வரை ஐ. தே. கட்சியின் ஆதரவு குறித்து உசிதமில்லை. இல்லாவிட்டால் மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் -- என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(ஐ க)

## பரீட்சை

புன்னாலைக்கட்டுவன், ஜூலை 19

மருதனார்மடத்தில் இயங்கும் யாழ்ப்பாண தேசிய கல்விக் கல்லூரி மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 28 ஆம் திகதி வரை நடைபெறும்.

தொடர்ந்து இம் மாணவர்களுக்கு ஒரு மாதம் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-133)

## வெள்ளைப்பூடு விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணத்தில் வெள்ளைப்பூடின் விலை தற்போது குறைவடைந்துள்ளது கிலோ 250 ரூபாவுக்கு விற்கப்பட்ட பூடு தற்போது தனியார் வியாபார நிலையங்களில் கிலோ 80 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது

(க-51)


# கேள்வி அறிவித்தல்

## பருத்தித்துறை பிரதேச சபை

படிவ விநியோகம்: 24-07-2000
படிவம் ஏற்றல்: 25-07-2000 நண்பகல் 12.00 மணி வரை
படிவம் திறத்தல்: 25-07-2000 நண்பகல் 13.00 மணி வரை

அட்டவணை

| வேலை விவரம் | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய தான வைப்பு |
|---|---|---|
| குடத்தனை பொதுக்கிணறு புனரமைப்பு | 100.00 | 250.00 |
| கொத்தியாவத்தை பொதுக்கிணறு புனரமைப்பு | 100.00 | 150.00 |

மேலதிக விவரங்கள் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ஜே.பி.யு.எம்)
தலைவர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி. (சி/12261)

பருத்தித்துறை பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புலோலி. 17-07-2000


## யாழ். ப. நோ. கூ. சங்கத்தில்

# பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம்

அரியாலை, ஜூலை 19

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் கட்ட மண்எண்ணெய் விநியோகத்தை கடந்த சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பித்துள்ளது.

சங்கத்தின் கிளைகள் ஊடாக பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு 2 லீற்றர் படி மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

மண்எண்ணெய் போதிய அளவு வந்ததும் தொடர்ந்து 3 ஆம் கட்ட விநியோகம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

சகல பேர்மிற்றுக்களுக்குமான மண்எண்ணெய் விநியோகம் சங்கத்தால் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)

## வல்லை ஊடான

# யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பஸ்சேவை அதிகரிக்கப்படும்

வடமராட்சி, ஜூலை 19

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை ஊடாக யாழ்ப்பாணத்துக்கு நடத்தப்பட்டுவரும் 751 இலக்கப் பாதை பஸ்சேவை மேலும் அதிகரிக்கப்படவுள்ளது

இப்பாதையில் தினமும் மூன்று பஸ்சேவைகளே நடைபெறுவதால் இந்தச் சேவைகள் போதாது என்றும்—

அந்தச் சேவையை அதிகரிக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும்—

யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதனிடம்கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இது குறித்து யாழ் அரச அதிபர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை ஊடான பஸ் சேவையை அதிகரிக்க விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

(க-173)

## விசர்நாய்க் கடியினால் மரணம்

மூளாய், ஜூலை 19

விசர்நாய்க் கடிக்கு இலக்காகிய வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் உதவியாளர் கந்தசாமி தர்மேசன் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் பயன் அளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

ஒரு மாதத்துக்கு முன்னர் இவரை நாய் கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-99)

## தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சண்டிலிப்பாய் கிளையின் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தில் கிளைத் தலைவர் எஸ். சிவநேசன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் இதில் கலந்து கொள்வார். (இ-3)

## தராசுகளுக்கு முத்திரையிடல்

சங்கானைப் பிரதேசசபைக் காரியாலயத்தில் தராசுகளுக்கு முத்திரையிடும் பணி யாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமான இப்பணி எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியைச் சேர்ந்த கடை வியாபாரிகள், சந்தை விற்பனையாளர்கள், மில், பேக்கரி, விறகுகாலை உரிமையாளர்கள் தத்தமது நிறுத்தல் அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக்கள பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் கேட்டுள்ளார். (க-30)

## ஐ.நா. அதிகாரிகள் நெடுந்தீவு விஜயம்

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தினால் நெடுந்தீவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களைப் பார்வையிடும் பொருட்டு இன்று புதன்கிழமை அந்த நிறுவனத்தின் அதிகாரிகள்குழு நெடுந்தீவுக்கு வருகை தரவுள்ளது.

(க-121)

## உதவி

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் — வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் — மாணவர்களுக்கு சர்வோதயம் அமைப்பு பாடசாலை உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.


# கூறுவிலை கோரல்

2000 - 07 - 31 ஆம் திகதி முதல்
2000 - 08 - 23 ஆம் திகதி வரை

நடைபெறவுள்ள க. பொ. த. (உ/த) பரீட்சை ஆவணங்களைக் கொண்டு செல்வதற்கு மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இச் சேவைக்குத் தங்கள் மோட்டார்வண்டிகளை வாடகைக்கு விட விரும்பும் உரிமையாளர்கள் இவ்வலுவலகத்தினால் விநியோகிக்கப்படும் படிவத்தில்

2000 - 07 - 24 ஆம் திகதிக்கு முன்

விண்ணப்பிக்கும் வண்ணம் கோரப்படுகின்றனர்.

திருமதி செ. மகாலிங்கம்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/12257)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கச்சாய் வீதி, கொடிகாமம் என்னும் முகவரியைச் சேர்ந்த நடராசா துஷ்யந்தி என்பரது தேசிய அ. அட்டை (825962026V), விசேட அ. அட்டையும் கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தையா விஜோதினி என்பவரது தேசிய அ. அ. (827750522V), விசேட அடையாள அட்டை (091035288) என்பன K K.S. வீதி, நாச்சிமார் கோயிலில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கோயில் அலுவலகத்தில் அல்லது மில்க்வைற் தொழிலகத்தில் ஒப்படைத்துதவவும்.

(76520)

### பொருளியல்

2000 A/L பரீட்சை எதிர் பார்ப்புக்கள் அடங்கிய நடைமுறை விடயங்கள் I, II மற்றும் அபிவிருத்திக் கொள்கைகள் பணம், சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்று வீதம் போன்ற நூல்கள் யாழ். நகரம், சுன்னாகம், நெல்லியடி புத்தகசாலைகளில் கிடைக்கும். ஆசிரியர் வே. கருணாகரன்.

(76448)

### இறைச்சிக்கோழி

சேவல், கல்பேட், விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். 31, மாஸ்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு).

(76161)

### வீடு வாடகைக்கு

நல்ல நிலையில் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: அ. தியாகராசா, இல. 41, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

(76521)

### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் பாவித்துக் கொண்டிருக்கும் ஜப்பான் கொண்டா கொம்பனித் தயாரிப்பான 9.3 சக்கர மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்லிகா, No. 230, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரச் சந்திக்கு அண்மையில்) யாழ்ப்பாணம்.

(76526)

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி, தையல் மெஷின் மற்றும் வீட்டுத் தளபாடங்கள், பாவனைப் பொருள்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஞா. சாந்தினி 15, சிவப்பிரகாசம் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(76523)

## தும்புத்தொழிற்சாலை இயங்கவில்லை

காரைநகர், ஜூலை 19

வேலணையில் அமைந்துள்ள தும்புத்தொழிற்சாலை பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு அதற்குரிய உபகரணங்களும் வழங்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் இத்தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

இத் தொழிற்சாலையை மீள இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. பாலநாராயணா கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

(ஐ-71)

## நெஞ்சங் கலங்கி நிற்கும் ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1950 — 07 — 28 | 1999 — 07 — 30 |

### அமரர் வயித்தி பசுபதிப்பிள்ளை

திதி: 19 - 07 - 2000

எமது அருமை அப்பாவே!
ஒளியை ஏற்றி விட்டுப் பிரிந்து
சென்றீர்களே! உங்கள் பிரிவால்
இன்றும் துயருறுகின்றோம்.
புத்தாயிரம் ஆண்டின் முன் இத்தரை விடுத்து
இறைபதம் எய்திய எம் அப்பாவை
எப்பிறப்பில் காண்போம் இனி?

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்,
அருமை அண்ணன்.

சுதுமலை தெற்கு,
அண்ணாமலை வீதி, மானிப்பாய். (76515)

## அறிவித்தல்

### வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்

1. புதிய 'லுமாலா' பெண்கள் துவிச்சக்கர வண்டி ஒன்று கழக மாணவர்களுக்கு / பழைய மாணவர்களுக்கு / உறுப்பினர்களுக்கு 22—07—2000 (சனி) பி.ப. 2.30 இற்கு (பு.நே.) ஏலத்தில் விற்கப்படும். இதில் பங்கு பற்ற விரும்புபவர்கள் கழக உபதலைவர் செல்வி இ. மாலினியிடம் மீளப்பெற முடியாத வைப்புப் பணமாக ரூபா 25 செலுத்தி தமது பெயர்களைப் பதிவு செய்யவும். ஏலத்தில் வெற்றி பெறுபவர் உடனடியாக முழுப் பணத்தையும் செலுத்தி துவிச்சக்கர வண்டியைப் பொறுப்பேற்க வேண்டும்.
2. ஆடிப்பூர உற்சவத்திற்காக நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு 01—08—2000 அன்று செல்ல விரும்பும் கழக மாணவர்கள்/ பழைய மாணவர்கள் / உறுப்பினர்கள் தமது பெயர்களைக் கழக உப செயலாளர் ஜெ. வாகீசனிடம் 22—07—2000 பி.ப. 3.30 இற்குப் பதிவு செய்யவும்.
3. சனி, ஞாயிறு நாள்களில் நடத்தப்படவிருக்கும் சிங்கள மொழி வகுப்பில் பங்கு பற்ற விரும்பும் கழக மாணவர்கள் / பழைய மாணவர்கள் / உறுப்பினர்கள் தமது பெயர்களை கழக செயற்குழு உறுப்பினர் செல்வி சு. சுபாஜினியிடம் 22—07—2000 (சனி) பி.ப. 3.30 இற்குப் பதிவு செய்யவும்.
   மேற்படி வகுப்பிற்கு ஆசிரியராகக் கடமையாற்றக்கூடிய தகுதியானவர்களிடம் இருந்து தபால் மூலம் விண்ணப்பங்கள் 30—07—2000 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
4. கழகத்தில் 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பழைய மாணவர் பற்றிய விவரத் தொகுப்பொன்றை வெளியிட உள்ளோம். எனவே பழைய மாணவர்கள் தமது தற்போதைய விவரங்களை 30-07-2000 ற்கு முன் எமக்கு அனுப்பி உதவவும். வெளிநாடு சென்ற பழைய மாணவர்களின் விவரங்களை அவர்களது பெற்றோர் எமக்கு அனுப்பி உதவவும்.
5. பாடசாலையைவிட்டுவிலகியவர்களுக்கான தமிழ்/ ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி நெறி (7 மாதம்) 01-09-2000 இல் இரண்டு பிரிவுகளாக ஆரம்பிக்கப்படும்.
   பிரிவு 1 — வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு.
   பிரிவு 2 — இடம்பெயர்ந்தவர்களுக்கு.
   மேற்படி பயிற்சிநெறியைப் பயில விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தினையும் கழகத்தில் வார நாள்களில் மு.ப 10. 00 மணிக்கும் பகல் 12. 00 மணிக்கும் இடையில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 30-08-2000.

செயலாளர்.

உடுப்பிட்டி வீதி,
வதிரிச் சந்தி அருகில்,
கரவெட்டி. (76524)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 31 — 10 — 1980 | 19 — 07 — 1994 |

செல்வி
### ஆனந்தலட்சுமி கோபாலப்பிள்ளை
(கௌரி)

(உலகப்பர் மேல்நிலைப்பள்ளி மாணவி— கடியாப்பட்டி புதுக்கோட்டை மாவட்டம், இந்தியா.)

ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!
ஆனந்த லட்சுமியே கௌரி நீ!
ஆறு ஆண்டு சென்றும் ஆறவில்லையம்மா
உன் பிரிவை!
அறுபது ஆண்டுகள் சென்றாலும் ஆறப்போவதில்லை
எங்கள் துயரம். ஏங்கித் தவிக்கின்றோம் உன்பிரிவால்.
எப்போது நீ வருவாய் இங்கு?

உன் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா,
மருமக்கள். அண்ணாமார், அண்ணிமார்,

G. கணேசலிங்கம்,
2 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு. (76503)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் விசுவநாதர் சுப்பிரமணியம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10-05-1921 | 19-06-2000 |

அன்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய் விளங்கிய
எமது அன்புத் தந்தையே!
பாசமாய் எம்மை வளர்த்துப் பாரினிலே பரிதவிக்க விட்டீரோ!
இனி அப்பா என்று யாரை அழைப்போம்?
என்றென்றும் உங்கள் நினைவலைகள்
எம்மை விட்டு அகலாது.
'நேற்று இருப்பார் இன்று இல்லை
இன்று இருப்போர் நாளை இல்லை'
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

19—06—2000 ஆம் திகதியன்று இறைவனடி எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளிற் கலந்து கொண்டவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிகள் வழங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கும் நேரில் கலந்து கொண்டு எமக்கு உதவியும் ஆறுதலும் நல்கியவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (19 07—2000) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உற்றார், உறவினர்கள்.

6 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (76512)

# ஆசிரிய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

திருகோணமலை,ஜூலை19

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்மொழி மூல அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு நேர்முகப் பரீட்சைகளை நடத்தும்படி வடக்கு - கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சு யாழ். மாவட்டத்தில் உள்ள வலயப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கடந்த நவம்பர் மாதம் கோரப்பட்டிருந்தன.

ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

நேர்முகப் பரீட்சையை நடத்தி இரு வாரங்களுக்குள் விவரங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் தொடர்பான விவரங்களை அடங்கிய பட்டியலை 'உதயன்' அலுவலகத்தில் பார்வையிடலாம்.

யாழ். வலயத்தில் இருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வெளியிடப்படுகின்றது. ஏனைய வலயங்களிலிருந்து அழைக்கப்பட்டோர் விவரம் தொடர்ந்து வெளிவரும்.

### ஆரம்பக் கல்வி

றொபின்சன் கிறிஸ்ரி ஜோசப் ஜெனிற்றா (கொன்வென்ட் றோட், யாழ்.), கனகு கஜநந்தினி (கொட்டடி, யாழ்.), கடாட்சம் சத்தீஸ்வரன் (மானிப்பாய் றோட், யாழ்.), ஜெயசீலன் மொறீன் ஜெயந்தா (அடைப்பன் வீதி, யாழ்.), மொகமட் தல்பீக் சித்தநிஷானா (முதலாம் குறுக்குத் தெரு, புத்தளம்).

இராஜரட்ணம் விஜயகுமாரி (நாயன்மார்கட்டு), பொன்னம்பலம் சாந்தநாயகி (கே.கே.எஸ்.வீதி, யாழ்.), சண்முகலிங்கம் தாரணி (நாவலர் வீதி, யாழ்.), சிறீகரன் உமாசந்திரன் (கொக்குவில் கிழக்கு), முருகேசு சிவப்பிரகாசம் (அச்சுவேலி தெற்கு).

கந்தையா சிவராஜா (நீர்வேலி தெற்கு). நவரட்ணம் முகுந்தா (அச்சுவேலி), கந்தசாமி செல்வரஞ்சனி (கோப்பாய் வடக்கு), பொன்னுத்துரை கவிதா (கோப்பாய் தெற்கு).

### உடற் கல்வி

பி.பாமினி (புங்கன்குளம் றோட், யாழ்.), அன்ரன் செல்வகுமார் டிலான் (முகவரி குறிப்பிடப்படவில்லை), கணேசன் தர்சினி (கந்தரோடை மேற்கு), பேர்னாட் லூசின் மேர்ஸி சுஜாந்தினி (நாவாந்துறை), மாதவராஜா பத்மராஜா (ஆனைக்கோட்டை).

பிரகாசராசா யூலி (குருநகர்), ராஜசேகரம் சிவசேகரம் (முதலாம் குறுக்குத் தெரு, யாழ்.), கனகசிங்கம் மிதிலா (அரசடி லேன், அரியாலை), செல்வரட்ணம் சுஜீவா (ராஜேஸ்வரி றோட், அரியாலை), திருச்செல்வம் திருக்குமரன் (பிறவுண் வீதி, யாழ்.).

எஸ்.வான்மதி (புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர்), கணபதிப்பிள்ளை விஜயபாலா (அரியாலை மேற்கு), சூடாமணி சுகுணா (கண்டி றோட், அரியாலை), ஜெயரட்ணசிங்கம் சுஜந்தா (கொக்குவில் கிழக்கு), பாலசுந்தரம் சசிக்குமாரன் (கொக்குவில் மேற்கு).

மகாதேவன் வினோகாந்தன் (உரும்பிராய் தெற்கு), கே.சத்தியபாமா (கோப்பாய் தெற்கு), நடராஜா கஜேந்திரன் (அச்சுவேலி தெற்கு), வடிவேலு செந்தூரன் (ஆவரங்கால்), சிவராசா செல்வச்சந்திரன் (கோப்பாய் தெற்கு).

விக்னேஸ்வரன் பாலசேந்தன் (பத்தைமேனி), சிவலிங்கராஜா சிவமோகன் (பத்தைமேனி), ஜெயச்சந்திரன் பிரதீப் (ராஜ வீதி, அச்சுவேலி), சுப்பிரமணியம் காந்தரூபன் (நீர்வேலி வடக்கு), சிதம்பரப்பிள்ளை சாந்தகுமார் (நீர்வேலி வடக்கு).

கந்தசாமி உதிஷ்ரன் (உரும்பிராய் தெற்கு), யோகேஸ்வரன் விமலன் (கல்வியங்காடு), ராஜாராம் ரகுமார் (கோப்பாய் தெற்கு), கார்த்திகேசு உமாகரன் (உரும்பிராய் கிழக்கு), குமாரசாமி கேதீஸ்வரன் (பலாலி றோட், திருநெல்வேலி).

### சித்திரம்

ஜெயவாணி செல்வரட்ணம் (உரும்பிராய் கிழக்கு), கனகசபை பிரபாகரன் (சரவணபவானந்த வித்தியாலய வீதி, கோப்பாய்), பூபாலசிங்கம் விஷ்ணுசிறி (அச்சுவேலி), பாலசுப்பிரமணியம் அரியதாஸ் (நீர்வேலி மேற்கு), கந்தசாமி நிமலதாஸ் (அச்சுவேலி தெற்கு), ராமலிங்கமூர்த்தி நிஷாந்திகா (நீர்வேலி), வைகுந்தநாதன் முகுந்தன் (கோட்டைகட்டியகுளம்,வவுனியா).

### ஆங்கிலம்

அந்தோனி திரேசா சியாமளா (கொன்வென்ட் றோட், யாழ்.), பழனித்துரை கனகதர்சினி (பருத்தித்துறை வீதி, யாழ்.), ஐயன் அருள் ஞானமலர் (திருநகர், யாழ்.), ஜூடி எலன் பாலகாந்தன் (வேம்படி வீதி, யாழ்.), நடனசபாபதிசர்மா சவிதா (வண்ணார்பண்ணை).

கந்தசாமி லலிதசொருபிணி (முகவரி இல்லை), ஜெனோறோஸ்ரீபன் (மவுண்ட்கார்மல் றோட், யாழ்.), ராஜசிங்கம் ஜெரீன் மோகனா (சுண்டிக்குளி), பிறிட்டோ ஜோனி அஜித் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்.), மரியதாஸ் கிம்பிறவுண்சன் (பாஷையூர்).

மகாலிங்கம் சிவரூபி (கன்னாதிட்டி றோட், யாழ்.), பத்மநாதன் தாட்சாயணி (சுண்டிக்குளி), மொஹமட் சிப்ளி நுஸ்ரான் பர்வின் (புத்தளம்), யோசப் பிரதீபா காயத்திரி (சப்பல் வீதி, யாழ்.), அருள்மணி அருள்நாயகம் (கொய்யாத்தோட்டம்), கிறிஸ்ரி சிந்தியா (மருதடி வீதி, யாழ்.), தர்சினி நாகராஜா நாச்சிமார் கோயிலடி, யாழ்.), பாக்கியநாதன் கிரிஸ்ரினா (குருநகர்), கனகன் ராஜினி (கலர்சாலை வீதி, திருநெல்வேலி), ராஜகுலேந்திரன் துஷாஜினி (நல்லூர்), கோபாலசிங்கம் சுரேகா (நல்லூர்), சத்தியப்பிரியா சத்தியமூர்த்தி (திருநெல்வேலி கிழக்கு), சின்னத்தம்பி சுகந்தி (கே.கே.எஸ். வீதி, கொக்குவில்), சிவஞானம் ஜாமினி (வண்ணார்பண்ணை), சிறீபதி திரிவேணி (கோண்டாவில் மேற்கு), வாசுகி சின்னத்தம்பி (கே.கே.எஸ். வீதி, கொக்குவில்).

சிவலிங்கம் திவ்யா(வண்ணார் பண்ணை), நாகராஜா பத்மராஜா (கொக்குவில் மேற்கு), தெட்சணாமூர்த்தி பிரவீனா(கோண்டாவில் கிழக்கு), பஞ்சாட்சரம் சாமினி (கொக்குவில் கிழக்கு), இராஜேந்திரராவ் ஜனந்தன்(செம்மணி றோட், நல்லூர்).

பிருகப்பிரியா(வண்ணார்பண்ணை) நிவேதிகா கணேசன்(கந்தர்மடம்), சுப்பிரமணியம் தனப்பிரியா(கோவில் வீதி, நல்லூர்),ராஜலிங்கம் தேவிகா (நல்லூர்), கனகரட்ணம் ராதிகா (கே.கே.எஸ் றோட், யாழ்) ஜெயனி இராசகோபால் (உரும்பிராய் கிழக்கு), கந்தசாமி சரஸ்வதி (நீர்வேலி வடக்கு).

பரராஜசிங்கம் தர்மகுமாரன் (நீர்வேலி வடக்கு), கந்தையா சுகுணாலினி (கோப்பாய் தெற்கு), சுந்தரலிங்கம் பிரதீபா (அச்சுவேலி வடக்கு), திருக்கேசன் மஞ்சுளா (கோப்பாய் வடக்கு), யசோதா காசிலிங்கம் (உரும்பிராய் வடக்கு).

சண்முகம் கலைவாணி(முகவரி குறிப்பிடப்படவில்லை), சீவரட்ணம் சுபாங்கனி(உரும்பிராய் வடக்கு), கனகசபாபதி வனிதா(ஊரெழு கிழக்கு) துரைராஜசிங்கம் யசோதா (இடைக்காடு), கே.மகேஸ்வரி (உரும்பிராய் மேற்கு), ரவீந்திரன் (புத்தூர் கிழக்கு).

நடராஜா பிரேமிளா(நீர்வேலி வடக்கு), பிருந்தா நடராஜா (நீர்வேலி மத்தி), தர்ஷினி சீவரத்தினம் (உரும்பிராய் வடக்கு) நடராஜா துஷ்யந்தினி(கோப்பாய் தெற்கு), பாலகிருஷ்ணன் நிரஞ்சனா (உரும்பிராய் கிழக்கு) கவிதா இராமச்சந்திரன் (உரும்பிராய் வடக்கு).

ராமச்சந்திரன் பிறேமசாந்தி (ஆடியபாதம் றோட்,நல்லூர்),இராஜதுரை ரஞ்சனா(கோப்பாய் வடகது), ராமச்சந்திரன் பகீரதன்(உரும்பிராய் வடக்கு), தியாகராஜா ரதிவதனி (கோப்பாய்), தியாகராஜா றிஸ்வி (இருபாலை, கோப்பாய்).

மகாதேவன் செந்தில்குமார் (உரும்பிராய் கிழக்கு), ஜெ.தற்பரன்(புத்தூர் மேற்கு), பூபாலசிங்கம் பிரியந்தி(உரும்பிராய்) சீனிவாசகம் விதுப்பிரியா(நல்லூர் வடக்கு), நமசிவாயம் வித்தியா(உரும்பிராய் வடக்கு), ரீ.ஈ.கிறிஸ்ரின் (கோப்பாய் வடக்கு)

### கணிதம்

சகாதேவன் சுதர்ஷன் (மானிப்பாய் றோட், யாழ்), வடிவேலு சசிரேகா(கில்னர் வீதி,யாழ்), கபிரியேல் பிறேமலதா (ஆனைக்கோட்டை), அமுதினி நாகராசா(வண்ணார் பண்ணை), ஜோன் அன்ரனி கிளைவ்பெல்சியா(மவுண்கார்மல் றோட், யாழ்), சரவணபவன் மாலதி (கட்டுவன் தெற்கு).

ஆரோக்கியநாதர் மன்ஸ் ராஜ்குமார்(ரக்கா றோட், யாழ்), செல்வநாதன் சசிலா (அரியாலை மேற்கு), கே.மீரா(சட்டநாதர் தெரு திருநெலவேலி), மரியதாஸ் ஆன் மொனிக்கா (பலாலி வீதி, திருநெல்வேலி), கணேஸ் தனுஜா(கோயில் வீதி நல்லூர்).

துரைரட்ணம் அகல்யா (இராமநாதன் வீதி, திருநெல்வேலி), தர்மராஜா அருள்நேசன் (வண்ணார் பண்ணை தெற்கு), பரமநாதன் அனுஷா(திருநெல்வேலி தெற்கு), குகராஜன் விமலினி(கந்தர்மடம்), சூடாமணி அகிலன்(அரியாலை).

(தொடரும்)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 18ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

511/145349/A, 512/144271/A,
512/144271/B, 512/144271/C,
512/144271/D, 512/144415/A,
512/144583/A, 512/144583/B,
512/147810/A, 512/147810/B,
512/149935/A, 512/149953/A,
512/152631/A, 512/152775/A,
512/152775/B, 512/152813/A,
512/152910/A, 512/152954/A,
512/152954/B, 512/153027/A,
512/153033/A, 512/154806/A.

### கரவெட்டி

512/149927/A.

### கோப்பாய்

511/145206/A, 511/145213/A,
511/145399/A.

### நல்லூர்

511/140968/A, 511/140969/A,
511/141033/A, 511/144803/A,
511/144803/B, 511/144803/C,
511/144804/A, 511/144806/A,
511/144806/B, 511/144886/A,
511/144886/B, 511/144886/C,
511/144886/D, 511/144886/E,
511/145093/A, 511/145202/A,
511/145225/A, 511/145225/B,
511/145225/C, 511/145277/A,
511/145339/A, 511/145341/A,
511/145370/A, 511/145537/A,
511/145574/A, 511/145574/B,
511/145620/A, 511/145638/A,
511/145698/A, 512/139137/A,
512/139137/B, 512/144423/A,
512/144431/A, 512/144431/B,
512/144504/A, 512/144504/B,
512/144504/C, 512/144541/A,
512/144541/B, 512/144541/C,
512/144541/D, 512/144541/E,
512/144542/A, 512/144542/B,
512/144692/A, 512/144711/A,
512/147775/A, 512/147775/B,
512/147775/C, 512/147789/A,
512/148206/A, 512/148206/B,
512/148206/C, 512/148206/D,
512/149903/A, 512/149903/B,
512/152639/A.

### பருத்தித்துறை

511/145096/A.

### உடுவில்

511/145174/A, 511/145189/A,
511/145189/B, 511/145208/A,
511/145219/A, 511/145222/A,
511/145222/B, 511/145222/C,
511/145226/A, 511/145242/A,
511/145242/B, 511/145242/C,
511/145265/A, 511/145265/B,
511/145280/A, 511/145295/A,
511/145318/A, 511/145413/A,
512/149925/A, 512/153013/A

# 3 ஆயுள்வேத நிலையங்கள் இடம்மாறி இயங்குகின்றன

அண்மையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து அரியாலை, கொழும்புத்துறை, கொய்யாத்தோட்டம் பகுதிகளில் இயங்கிவந்த மூன்று ஆயுள்வேத வைத்திய நிலையங்கள் தற்போது மூடப்பட்டுள்ளன.

இவை தற்போது யாழ். மாநகர சபை, நீராவியடி மற்றும் நாச்சிமார் கோயில் பகுதிகளிலுள்ள சித்த வைத்திய நிலையங்களுடன் இணைந்து செயற்படுகின்றன.

மேற்படி பகுதி மக்கள் தற்போது தற்காலிகமாக இயங்கும் பகுதிகளில் உள்ள நிலையங்களில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதி நிலையங்களில் இருந்து மருந்துப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், எனினும் வைத்திய சாலை தளபாடங்கள் எதனையும் எடுத்துவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் யாழ். மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-9)

# மீனவர்கள் இருவர் மிதிவெடியில் சிக்கினர்

## ஒருவர் கால் இழந்தார்

நெல்லியடி,ஜூலை19

மிதிவெடியில் சிக்கிய மீனவர் இருவரில் ஒருவர் இடது காலை இழந்தார். மற்றொருவர் இருகால்களிலும் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 10மணியளவில் வடமராட்சியில் உள்ள கற்கோவளம் கடற்கரை வீதியில் இடம்பெற்றது.

கடலில் மீன் பிடித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த இதே இடத்தைச் சேர்ந்த யோகராசா பிரகாஷ் (வயது 17) என்பவரே இடது காலை இழந்தவராவார். இவருடன் கூட வந்த பாலசுந்தரம் சிவராஜா (வயது 45) கால்களில் காயமடைந்தார்.

இவர்கள் இருவரும் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-109-173)

## சஞ்சீவன் கொலை:

# நீதி விசாரணை நடத்த குழு ஒன்றை நியமிக்குக

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவனின் படுகொலை தொடர்பாக நீதியான விசாரணையை மேற்கொள்வதற்கு வசதியாக குழு ஒன்றை உடன் அமைக்கும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

அந்தச் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலர் த.பஞ்சலிங்கம் நேற்று முன்தினம் அனுப்பியுள்ள அவசரச் செய்தியிலேயே இப்படிக் கோரியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் கொலை திட்டமிட்டு செய்யப்பட்டது என்பதை தங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இத்தகைய சம்பவங்களினால் யாழ். மாணவர்களின் கல்வி நிலை, அவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டு வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம். ஏற்கனவே தேவையற்ற கைதுகளினால் மாணவர்கள் மனநிலை பாதிப்படைந்துள்ளனர். இச்சம்பவத்தினால் யாழ். மாணவர்கள் குழப்ப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இன்று சஞ்சீவனுக்கு நடந்தது தான் நாளை தமக்கும் நடக்கப் போகின்றது என எல்லோரும் அஞ்சுகின்றனர். எனவே இக்கொலை தொடர்பான விசாரணைக்காக குழு ஒன்றை அமைத்து நீதியான விசாரணையை மேற்கொண்டு உண்மை நிலையை வெளியிட்டு மாணவர்களின் தொடர்ச்சியான கல்விக்கு ஒருசுமுக நிலையை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (இ-3-7)

# சஞ்சீவனின் கொலைச் சம்பவம் போன்று இனியும் தொடர அனுமதிக்கவேண்டாம்

## ஜனாதிபதிக்கு மனிதநேய அமைப்புகள் மகஜர்

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் கொல்லப்பட்டது போன்ற சம்பவங்கள் இனி மேலும் நிகழாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜூலை 13 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோ. சஞ்சீவன் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் மே 11ஆம்திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன், நிரோஜனும் அவரது தந்தையும் சுட்டுக் கொல்லப்பட்டனர். நாம் அறிந்த வரையில் இவர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள், சட்டவிரோத செயல்கள் எதிலும் ஈடுபடாதவர்கள். - இவர்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகம் தேவையற்றது.

இவ்வாறான சம்பவங்களைத் தொடர்ந்து வடபகுதியில் உள்ள பெற்றோரும், மாணவரும் பீதியாலும் பதற்றத்தாலும் பீடிக்கப்பட்டுள்ளனர்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டபோது இருந்த 'பயங்கர ஆட்சி' மீண்டும் தற்போது ஏற்பட்டுவிட்டதோ என்று மக்கள் அஞ்சுகின்றார்கள்.

எனவே இந்தச் சம்பவங்களை ஆராயும்படி வேண்டுகின்றோம். மேலும் போர்ச் சூழலும் அண்மையில் திருத்தி அமுல் செய்யப்பட்ட அவசர காலச் சட்டமும் இருக்கும் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்து விடுவார்கள்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

# போரில் சிக்குண்டுள்ள மக்களைப் பாதுகாக்க அரசு போதியளவு நடவடிக்கை எடுக்கவில்லை

## ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் அதிருப்தி

லண்டன்,ஜுலை19

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் போரில் சிக்குண்ட மக்களைப் பாதுகாக்க திருப்திகரமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை.

மேற்கண்டவாறு அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களான றிச்சர்ட் ஹோவிற் மற்றும் றொபர்ட் கீவன்ஸ் ஆகியோரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றுவரும் சண்டையால் இடம்பெயர்ந்த மக்களை வவுனியாவில் சந்தித்தனர்.

நாடு திரும்பி அவர்கள் இருவரும் வெளியிட்டுள்ள அறிக்கையில் மோதல் நடக்கும் இடங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இருந்து இடம்பெயரும் மக்களின் நிலை மிகப்பரிதாபமானது என்றும் -

அவர்கள் படும் துயரம் சியாரா லியோன், செச்சினியா போன்ற இடங்களில் சாதாரண மக்கள் அனுபவிக்கும் துயரங்களைப் போன்று மோசமாக இருக்கின்றது என்றும் - தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசின் ஊடகங்கள் மீதான தணிக்கைக் கொள்கை மற்றும் போக்குவரத்து மீதான கட்டுப்பாடுகள் அந்த அறிக்கையில் கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினால் தவிர உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர அவர் முன்வைத்துள்ள பரிந்துரைகள் செயற்பட வாய்ப்பில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# புனித பத்திரிசியார் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நினைவு முத்திரை

## நாளை மறுதினம் வெளியிடப்படும்

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி இலங்கை அரசு நினைவு முத்திரையை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வெளியிடவுள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் சிறப்பு நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் ஏ.கே.சிவஞானசுந்தரம் முதல் நினைவு முத்திரையையும், முதல் நாள் உறையையும் வெளியிட்டு வைப்பார்.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் நினைவு முத்திரையையும், முதல் நாள் உறையையும் பெற்றுக் கொள்வார். (இ-3)

# பர்மா, தாய்லாந்துக்கு பிக்குமார் குழு செல்லும்

## புலிகளுக்கு உதவாதீர் எனக் கேட்க!

கொழும்பு,ஜுலை19

தாய்லாந்து, பர்மா ஆகிய பௌத்த நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை வேரோடு பிடுங்கிவிடுமாறு அந்த நாடுகளைக் கேட்டுக்கொள்வதற்காக ஏழு பிக்குமார் அடங்கிய குழு அந்த நாடுகளுக்குச் செல்லத் தயாராகிவருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாதுலுவாவே சோபித தேரர் உட்பட்ட இந்தப் பிக்குமார் இந்த வாரம் இப்பயணத்தை மேற்கொள்ள உத்தேசித்துள்ளனர். அவர்கள் முதலில் தாய்லாந்தில் அரசருக்கு அடுத்த அந்தஸ்தை வகிக்கும் இராஜ பிக்குவைச் சந்தித்து புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை அவர் மூலம் அந்த நாட்டில் பூண்டோடு ஒழிக்கத்திட்டமிட்டுள்ளனர். இதனை அடுத்து, தாய்லாந்திலும் பர்மாவிலுமுள்ள பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் ஏனைய மதங்களின் தலைவர்களையும் இந்தக் குழு சந்திக்கவுள்ளது.

இவ்விரு நாடுகளிலும் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் சமீபகாலமாக அதிகரித்துள்ளதாக தகவல் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை - இந்தக்குழுவைச் சேர்ந்த தறணகம உசல தம்ம தேரர் சமீபத்தில் தாய்லாந்து அரசிடம், புலிகள் இயக்க நடவடிக்கைகளை அந்த நாட்டில் நிறுத்திவிடுமாறு கடிதம் மூலம் கேட்டிருந்தார். (ஐ-க)

### படையினர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் தலைவர் ஏ.டபிள்யூ. நாணயக்கார தெரிவித்தார்.

வன்னி செல்வதற்கு அனுமதி வழங்குமாறு கடந்த மே மாதம் 10ஆம் திகதி ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்துக் கோரியதாகவும் -

இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்றும் - அவர் மேலும் சொன்னார். (இ-3)

### தமிழகம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

தலைமன்னாரிலிருந்து படகு ஒன்றில் 12 பேர் தமிழகம் நோக்கிச் சென்றனர். இராமேஸ்வரத்துக்கு சமீபமாக மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவரின் 'றோலர்' ஒன்றில் இவர்களை ஏற்றிவிட்டு படகின் ஓட்டிகள் திரும்பிவிட்டனர்.

பின்னர் அந்த 'றோலர்' ஓட்டிகள் பேசாலைக் கடற்கரைக்குச் சமீபமாக - கழுத்துவரை நீருள்ள பகுதியில் - இவர்களை இறக்கிவிட்டுச் சென்றுவிட்டதாகக் கூறப்பட்டது.

கடலில் தத்தளித்த இவர்களில் நான்கு பெண்கள் கரைசேர்ந்தனர். ஏனையோர் குறித்து நேற்று இரவுவரை தகவல் கிடைக்கவில்லை.

கரைசேர்ந்த நான்கு பெண்களும் மன்னார் பொலீஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

எதிர்வரும் 31ஆம் திகதிவரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

படகோட்டிகள் இருவரையும் பொலீஸார் தேடிவருகின்றனர். (இ-3-7)

### வவுனியாவில் கிரனேட் வீச்சு

வவுனியா மாவட்டம்-பட்டைக்காட்டுப் பகுதியில் நாசகாரத் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் பயணம் செய்த "ஓட்டோ" ஒன்று நேற்று மாலை 6.30 மணியளவில் கிரனேட் தாக்குதலுக்கு இலக்கானதில் அதில் பயணம் செய்த 3 பொலீஸார் காயமடைந்தனர்.

"ஓட்டோ" மீது ஐந்து குண்டுகள் வீசப்பட்டதாகவும்,அதில்3 வெடித்ததாகவும் ஏனைய இரண்டும் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டதாகவும் பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் ஜெயவர்த்தன என்ற கான்ஸ்டபிள் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (இ-7-3)

### ஷெல்லுக்கு ஒருவர் பலி

மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் திருக்குழந்தையர் சின்னையா (நெய்தல் ஒழுங்கை -மட்டுவில்)என்பவர் உயிரிழந்தார் எனச் செய்திகள் தெரிவித்தன. (இ-7-4)

### கண்ணிவெடியில் டிரக் சிக்கியது

திருகோணமலை மாவட்டம் சேருவிலவில் இருந்து மூதூர் நோக்கி நேற்று நண்பகல் 12-40 மணியளவில் சென்றுகொண்டிருந்த இராணுவ டிரக் ஒன்று கண்ணிவெடித்தாக்குதலுக்கு இலக்கானது.

இந்தத் தாக்குதலில் 8 படையினர் காயமடைந்தனர். அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

படையினர் சென்ற டிரக் பலத்த சேதத்துக்குள்ளானது. (இ-3)

### நகை கண்டெடுப்பு

சுன்னாகம் இலங்கை வங்கிக்கு அண்மையில் நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டு வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் வந்து வங்கியில் பெற்றுக் கொள்ளும்படி முகாமையாளர் கேட்டுள்ளார். (இ-4)

### அனுமதி அட்டைகள் வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஜுலை19

எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டன.

தனியாரின் அனுமதி அட்டைகள் இன்று தபாலில் சேர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தப் பரீட்சைக்கான காகிதாதிகளும் எடுத்துவரப்பட்டுள்ளன.(இ-3)

### பாலாவோடை அம்மன் ஆலய வீதி திருத்தம்

யாழ்ப்பாணம்,ஜுலை19

காரைநகர் பாலாவோடை அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் வீதியைப் புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வீதி மிகமோசமான நிலையில் இருப்பதாக மக்கள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதனின் ஏற்பாட்டில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### நுண் அலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நேரத்தில் 80 வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்திய நாம் எப்படி 1500பேரைத் தற்சமயம் திருப்திப்படுத்தமுடியும்?

வாடிக்கையாளருக்கு நிலுவை கூடுதலாக இருந்தபோதும் சகல வாடிக்கையாளருக்கும் குறைந்த பட்ச சேவையைப் பூர்த்தி செய்து வருகிறோம்.

தொலைத்தொடர்பைப் பொறுத்தவரையில் திடீரென பாரிய அபிவிருத்தியைச் செய்து 2500பேருக்கு உடனடியாகத் தொலைபேசி இணைப்பு வழங்கமுடியாது என்பதை சகலரும் உணரவேண்டும்.

இந்த அபிவிருத்தியைப் படிப்படியாகத்தான் மேற்கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் செய்மதியூடாக குறைந்தபட்சம் 30இணைப்புக்களை ஏற்படுத்தியுள்ளோம். 15 இணைப்புக்கள் உள்ளே வரவும், 15 இணைப்புக்கள் வெளியே செல்லவும் இணைக்கப்பட்டுள்ளன.

நாளொன்றுக்கு கிட்டத்தட்ட 700 தொலைபேசி அழைப்புக்கள் இங்கிருந்து வழங்கப்படுகின்றன. வெளியிடங்களிலிருந்து அதேயளவு அழைப்புக்கள் இங்கு வருகின்றன.

#### சேவை மனப்பான்மை

ரெலிக்கொம் நிறுவனம் வியாபார நோக்குடன் செயற்படுவதாக வெளிவந்துள்ள அறிக்கைகளையிட்டு கவலையடைகின்றோம்.

செய்மதியூடான அழைப்புக்கு ஒரு நிமிடத்துக்கு 220ரூபா செலவாகின்றது. 3 நிமிட அழைப்புக்கு 660 ரூபா செலவாகின்றது. ஆனால் வாடிக்கையாளர்களிடமிருந்து 3நிமிடத்துக்கு 20 ரூபாவே அறவிடுகின்றோம். சேவை மனப்பான்மையுடனேயே இது மேற்கொள்ளப்படுகின்றது. வியாபார நோக்கத்துடன் அல்ல - என்றார். (இ-3)

### சஞ்சீவனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது சம்பந்தமான பணிப்புரையை இராணுவத் தலைமையகம், யாழ்ப்பாணம் 51 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தரவுக்கு அனுப்பிவைத்திருப்பதாகவும் தலைமையக உயர் அதிகாரி சொன்னார்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவனின் கொலை தொடர்பான உண்மை நிலையை வெளிக்கொணரவும் இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரையும் மற்றும் பொதுமக்கள் தரப்பினரையும் அழைத்து விசாரித்து சம்பவத்தை உள்ளவாறு அறிவிக்கவும் - என்றவாறு அந்தப் பணிப்புரை அமைந்திருப்பதாக அறியவந்தது.

எனினும் அறிவுறுத்தல் வழங்கப்படுவதற்கு முன்னரே 51 ஆவது படையணியின் தளபதி பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடியுள்ளார். கொலை தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தகவல் கிடைத்துள்ளதாக இராணுவத் தலைமையக உயர் அதிகாரி மேலும் கூறினார். (அ-3)

### ஐ.தே.கவினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேரணியில் சென்றனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மருதானையில் ஆரம்பமான இந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பி ஆடிப் பாடிக்கொண்டு சென்றனர்.

இந்தப் பேரணியில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் 500பேர் வீதம் இதில் பங்கு கொண்டனர். (இ-3-4-7)


**சிவா திரையில்**

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சரத்குமார், பிரபுதேவா, திவ்யா நடித்த

**பெண்ணின் மனதைத் தொட்டு**

(புதிய வெளியீடு)

10.30. 2.00

(C/12260)



**கதிர்சன் திரையரங்கு**

மயிலங்காடு.

சரத்குமார், பிரபுதேவாவின்

**பெண்ணின் மனதைத் தொட்டு**

இன்று 11.00, 3.00

(C/12259)



**A/L - தமிழ்**

பரீட்சை வழிகாட்டல்

**நாக.தமிழிந்திரன்**

22.07.2k சனி 2 மணி வழமையான யாழ்.நிறுவனம்

NOTE :- 2001 பரீட்சைக்கான புதிய பிரிவு

வியாழன், வெள்ளி 3.00 - 4.00

★SUBRA -14 இலும் EXPRESS இலும்

புதிய 2001 மீட்டலும் 2002 புதிய பிரிவும் ஆரம்பம்

(76539)


## கண்ணீர் அஞ்சலி

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய இசை ஆசிரியர்

திரு.கி.பரமேஸ்வரன்

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செல்லம்மா கிட்ணர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இசை ஆசிரிய ஆலோசகரும் ஆசிரியர்களும்*

தென்மராட்சி.

(76548)

## மரண அறிவித்தல்

**திருமதி நாகம்மா சபாரத்தினம்**

கொக்குவில் நந்தாவிலைச் சேர்ந்த இரத்தினம் என அழைக்கப்படும் திருமதி நாகம்மா சபாரத்தினம் 14.07.2000 வெள்ளிக்கிழமையன்று கனடாவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையாவின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சின்னையா சபாரத்தினத்தின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்ற சண்முகரத்தினம் மற்றும் சறோஜினி தேவி, தவமணிதேவி, பராராஜலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜலக்சுமி, தேவராஜா, ராமச்சந்திரா, ஞானாம்பிகை, அனுஷா, ஆகியோரின் அன்பு மாமியாரும் ரஜித்தா, சேந்தன், சுபராஜன், சேயோன், மருகேசன், சுகன்யா, கஜன், அஜந்தன், நிஜந்தி, நிருஷா, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சுபங்கா, கீர்த்தனா, ஷைலன், பிரதாயினி, பாஜிராணி, ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.07.2000 திங்கட்கிழமையன்று கனடா Mississauga இல் நடைபெற்று St.John மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:

பிள்ளைகள்

(c/12263)

இப்பத்திரிகை நியூ. உதயன் பப்ளிகேசன்(பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.